# தமிழ் முரசு

4

ஆசிரியர்:
ம.பொ. சிவஞான



தமிழ் முரசு

" வெற்றி எட்டுத்திக்கும் எட்டக் கொட்டு முரசே !
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே !

# கட்சியைக் கலையுங்கள்

சென்னை மாகாணத்தில் காங்கிரசின் பெயரால் நடைபெறும் பிரகாசம் ஆட்சி காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளையே காற்றில் பறக்கவிட ஆரம்பித்துவிட்டது. பிரகாசம் ஆட்சி என்று நாம் சொல்லுகின்றபோது பிரதமர் பிரகாசம், அவருக்குத் துணைபுரியும் மந்திரிசபை, அவர்களுக்கு வழிகாட்டும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சி ஆகிய மூன்றையும் சேர்த்தே குறிப்பிடுகிறோம். சட்டுப்பாட்டுக்குப் பெயர்போன காங்கிரஸ்காரர்கள் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் சிந்திச் சிதறிச் சீரழிந்து வருகின்றனர். மந்திரிகளுக்குள்ளே கொள்கை உடன்பாடில்லை. காங்கிரஸ் சட்ட சபைக் கட்சியின் நடவடிக்கைகள் சந்தைக் கடைக்குச் சமமாகி விட்டன. மந்திரி சபையினரோ நாட்டு மக்களைக் காக்கும் திட்டங்களை வகுப்பதற்குப் பதிலாகத் தங்கள் பதவிகளைக் காப்பதிலேயே கவனம் செலுத்திக் காலம் கழிக்கின்றனர். எனவே, இன்று இந்த மாகாணத்தை உண்மையில் ஆட்சிபுரிவது பழைய அதிகார வர்க்கத் தெய்வங்கள்தான் என்பதில் ஐயமில்லை.

சென்னை சர்க்கார் பிறப்பித்த அவசரச் சட்டம் ஒன்றே காங்கிரஸ் மந்திரி சபையினரின் கொள்கையற்ற போக்கைக் குறிக்கப் போதுமானது. நாட்டில் நடைபெறும் மக்கள் இயக்கங்கள் அனைத்தையும் மண்டையில் அடிக்கப் போலீ

சாருக்குச் சர்வாதிகாரம் அளிக்கிறது இந்தச் சட்டம். அவசரச் சட்டத்திலுள்ள கடுமையான பகுதிகளை நீக்கிவிடுவதாகப் பிரதமர் வாக்களித்திருக்கிறார். அதில் காங்கிரஸ் கட்சியின ரும் திருப்தி அடைந்துவிட்டனர். இது கோதிப்படைந்த மக்களை ஏமாற்றும் இன்னொரு சூழ்ச்சி. சட்டத்தைத் திருத்துவதல்ல இன்றைய பிரச்சினை. இந்த மாகாண மக்க ளைக் காங்கிரசின் கொள்கையாகிய அன்பு முறையில் ஆள்வதா, ஏகாதிபத்திய முறையாகிய அவசரச் சட்ட அடக்கு முறைகளால் ஆள்வதா என்பதேயாகும். அவசரச் சட்டத்தின் மூலம் ஆளவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்ட தாகப் பிரகாசம் ஐயத்துக்கு இடமின்றி அறிவித்து விட்டார். சட்ட சபையில் வந்த அவசரச் சட்டக் கண்டனத் தீர்மானத் தைத் தோற்கடித்ததின் மூலம் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சி யும் அதை ஆமோதித்துவிட்டது. இதனால் அக்கட்சி போலீஸ் ஆட்சியின்கீழ் அடைக்கலம் புகுந்து விட்டது.

சட்ட சபையில் அவசரச் சட்டக் கண்டனத் தீர்மானத் தின்போது பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் சிலரின் பொறுப் பற்ற பேச்சுக்கள் ஏழை மக்களிடையே ஆத்திரத்தை எழுப்புவதாய் இருக்கின்றன. மில் முதலாளியாகிய திரு. என். எம். ஆர். சுப்பராமன் இந்த அவசரச் சட்டத்தைக் கொஞ்ச காலத்துக்கு முன்பே கொண்டுவராமல் போன தற்காகச் சர்க்காரைக் கண்டித்தார். காங்கிரஸ் பதவி ஏற்றுப் பத்து மாதம்கூட முடியவில்லை. இந்த நிலையில் கொஞ்ச காலத்துக்கு முன்பே கொண்டு வந்திருக்க வேண்டு மென்றால் பதவி ஏற்ற உடனடியாகச் செய்திருக்க வேண்டு மென்றே பொருள். மில் முதலாளிகளின் சார்பாகத்தான் இன்றைய சென்னை சர்க்கார் நடப்பதாகத் திரு. சுப்பராமன் கருதுகிறார் போலும். இன்னொரு காங்கிரஸ் அங்கத்தினரான

திரு. வேதரத்தினம் பிள்ளை இந்த அவசரச் சட்டத்தைத் தஞ்சை ஜில்லா வாசிகள் வரப்பிரசாதமாகக் கருதுகின்றனர் என்று கூறிச் சட்ட சபையில் ஆனந்த பரவசரானார். தஞ்சை மிராசுதாரர்களுக்கு இது வரப்பிரசாதமாக இருக்கலாம். ஆனால் உழவர் மக்களுக்கு இது எப்படி வரப்பிரசாதமாய் இருக்க முடியும்? வேதரத்தினம் பிள்ளையின் கண்ணோட்டத்தில் தஞ்சை ஜில்லாவின் அபிப்பிராயம் மிராசுதாரர்களின் அபிப்பிராயத்தில் அடங்கியது போலும். ஆம். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது இலக்கணம் அல்லவா? அவசரச் சட்டத்தை ஒரு காங்கிரஸ்காரர் வரப்பிரசாதம் என்று வாழ்த்துவது காங்கிரசின் வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவை யாகும்.

மாகாணத்தில் ஏற்படும் தொழிலாளர் விவசாயக் கிளர்ச்சிகள் எல்லாம் கம்யூனிஸ்டுகளின் அரசியல் சூழ்ச்சி என்றும், பலாத்காரத் தூண்டுதல் என்றும், ஆகவே கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்காகவே அவசரச் சட்டம் அவசியமாயிற்று என்றும் வாதிக்கப்பட்டது. ஆனால், இன்று கோவையில் 32,000 பேர் வேலை நிறுத்தம் செய்திருப்பது இந்த வாதத்தைப் பொய்ப்படுத்துகின்றது. ஏனெனில், அதை நடத்துபவர்கள் கம்யூனிஸ்டுகளுடன் கருத்து வேற்றுமை கொண்ட காங்கிரஸ்காரர்கள். உண்மையில் காங்கிரஸ் சர்க்காருக்குத் தொழிலாளர்மீது கருணை இருக்குமானால் வேலை நிறுத்தத்துக்குக் காரணம் என்னவென்று ஆராய வேண்டுமே தவிர, வேலை நிறுத்தத்தை நடத்துவோர் யார் என்று ஆராயக்கூடாது.

சுருங்கச் சொன்னால் இன்றைய காங்கிரஸ் சர்க்காரிடம் தொழிலாளர்—உழவர்கள் துயரங்களைப் போக்குவதற்கான தெளிவான திட்டம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

இன்று பிரகாசம் மந்திரி சபைக்கு ஆட்டம் கண்டிருப்ப தாகச் சொல்லப்படுகிறது. இதனால் பிரகாசம் போய் வேறொருவர் பிரதமராக வரலாம்; அல்லது பிரகாசத்தின்கீழே உள்ள பழைய நபர்கள் நீக்கப்பட்டுப் புதியவர்கள் புகுத்தப் படலாம்; இதனால் ஏற்படும் பயன் என்ன? பிரகாசத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுபவர்கள் எந்தக் கொள்கையின்மீது அப்படிச் சொல்லுகிறார்கள்? அவசரச் சட்டத்தின்மீது ஆத்திரம் கொண்டா? இல்லை இல்லை. அதைத்தான் ஏகமனமாக ஏற்றுக்கொண்டார்களே! மற்றும் பிரகாசம் ஆட்சியில் நடத்தப்பட்ட கொடுமைகள் எவ்வளவோ உண்டு. அவற்றை யெல்லாம் அங்கீகரித்த வர்கள்தான் இப்பொழுது பிரகாசத்தின்மீது நம்பிக்கை இல்லை யென்று நாடறியக் கூறுகின்றார்கள். மக்களின் நலத் தில், ஜனநாயகக் கொள்கையில், முதலாளித்துவ எதிர்ப்பில் அக்கறையற்ற இன்றைய சட்டசபைக் காங்கிரஸ் கட்சியில் பிரதம மந்திரிப் பதவியையோ வேறு பதவிகளையோ மாற்றி விடுவதினால் மட்டும் கடந்த காலத்தில் நடந்து வந்த அடக்கு முறைகளோ கட்சியின் சந்தைக்கடைப் போக்கோ மாறிவிடும் என்று நம்புவதற்கில்லை. எனவே, நாம் விரும்புவது இன்றைய சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியையே கலைத்து மறு தேர்தல் நடத்தவேண்டும் என்பதே. அப்போதுதான் ஆளுக்கொரு கட்சி என்ற அறிவற்ற நிலை மாறி காங்கிரஸ் பலம் பெறும்.

தமிழ் நாட்டுத் தேசபக்தர்களை வேண்டுகிறோம்: காங்கி ரஸ் ஆட்சியில் குண்டுக்கும் குண்டாந்தடிக்கும் வேலை இல்லை யென்று கிளர்ச்சி செய்யுங்கள். நாம் இருந்த சிறைச்சாலை யில் இனி நமது எதிரிகள் கூட இருக்கக் கூடாது என்று முழக்கமிடுங்கள்.

## கலைச் சொல் கமிட்டி

தமிழில் கலைச்சொற் பட்டி தயாரிப்பதில் ஏற்பட்ட
கருத்து வேற்றுமைகளையும் அதன் விளைவாகக் கல்வி மந்திரி
யார் பழைய கலைச்சொற் கமிட்டியில் தமிழ்ப் பற்றுடையார்
சிலரைச் சேர்த்து அக்கமிட்டியைத் திருத்தி அமைத்ததை
யும் தமிழர்கள் அறிவார்கள். அக்கமிட்டியினர் பன்முறை
கூடி நன்கு ஆராய்ந்து முடிவான ஒரு பட்டியலைத் தயாரித்
துச் சர்க்காருக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், தங்களிஷ்
டப்படி யெல்லாம் வடமொழிச் சொற்களைப் பட்டியலில்
புகுத்த முடியாது படுதோல்வி அடைந்த அக்கமிட்டியின்
நான்கு அங்கத்தினர்கள் தாங்கள் ஒரு தனிப் பட்டியலைத்
தயாரித்துச் சர்க்காருக்கு அனுப்பினராம். கமிட்டியின்
பெரும்பான்மையினரான எட்டுப்பேர் தயாரித்த பட்டிய
லில் நான்கு பேர் கொடுத்த வடமொழிச் சொற்களையெல்
லாம் புகுத்தி ஒரு புதிய பட்டியல் கல்வி மந்திரியார் உத்திர
வின் பேரில் அச்சாகி வருவதாகக் கேள்விப்படுகிறோம்.
பெரும்பான்மையினரின் தீர்ப்பைச் சிறுபான்மையினரின்
பிடிவாதப் புத்தி ரத்துச் செய்யும் என்பதை இந்திய அரசிய
லில் பார்க்கிறோம். ரத்துச் செய்யும் அதிகாரத்தைச் சிறு
பான்மையினருக்குத் தருவது ஆளுகின்ற அன்னியரின் பிற
விக் குணம் என்று ஆறுதல் அடைகின்றோம். ஆனால் தமிழ்
மொழி வளர்ச்சியைத் தடைசெய்யச் சிறுபான்மையின
ருக்கு உரிமை தந்த கல்வி மந்திரியின் போக்கைக்கண்டு தமிழர்
ஆத்திரம் கொள்ளாமல் இருக்க முடியாது. அதிலும் ஒரு
தமிழ் மகனே இப்படிச் செய்யும்போது ஆத்திரத்தோடு,
வெட்கமும் தோன்றுகின்றது. ஜனநாயக முறைப்படி
பன்னிரண்டு பேர்கொண்ட ஒரு கமிட்டியில் எட்டுப் பேர்
ஒரு முடிவுக்கு வந்தால் அது கமிட்டியின் முடிவாகவே

கொள்ளப்படும். அதற்குக் கட்டுப்பட்டுத் தீரவேண்டுவது சிறுபான்மையினரின் கடமை. ஆனால், இங்கே தமிழ் மொழி விஷயத்தில் ஜனநாயகம் வேறு உருவம் எடுத்து விட்டது. எட்டுப்பேர் முடிவுக்கு மாறாக நான்கு பேர் ஒரு பட்டியல் தயாரித்துச் சர்க்காருக்கு அனுப்பினார்கள் என்றால் எந்த நம்பிக்கையின் மீது அப்படிச் செய்தார்கள்? கமிட்டியின் தலைவர் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தியின் மூலம் தான் சிறுபான்மையினரின் சர்க்காருக்குச் சென்றதாம். பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனுமாய் இருக்கும் இவர் நிலை மிகவும் இரங்கத் தக்கது. சிறுபான்மையினரின் பட்டியலைக் கொண்டு பெரும்பான்மையினரின் பட்டியலைத் திருத்திய அந்த மேதாவிகள் யார்? பெரும்பான்மையினரான எண்மர் யார்? சிறுபான்மையினரான நால்வர் யார்? இந்த இரண்டு பட்டியலிலும் தமிழுக்குத் தந்த பங்கு எவ்வளவு? இந்த விவரங்களை விரைவில் அறிவிப்போம்.

---

*Demand*

**PRABHAT INK**

High Grade
for Fountain Pens

*Available From*

**PRABHAT TRADERS**

**Stationers, General Merchants, Importers & Exporters**

**4 & 5, Badrian Street, G. T., Madras.**

*Tele*:—PRABAKAR, Madras.

*Branches at:*

**KUMBAKONAM, TINNEVELLY.**

# செய்தித் திரட்டு

## விருதுநகரில் வள்ளுவர் விழா :

கடந்த ஜனவரி 26-ஆம் நாள் விருதுநகரில் திருவள்ளுவர் நினைவு நாள் "தமிழ் முரசு" ஆசிரியர் திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாலை 5-மணிக்கு இரு வெண் புரவிகள் பூட்டி அலங்கரிக்கப்பட்ட கோச் வண்டியில் தலைவர் ஊர்வலம் நடைபெற்றது. திரளான மக்கள் கலந்து கொண்டனர். மாலை 6-மணிக்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆண்களும், பெண்களும் பல்லாயிரக் கணக்கில் குழுமி இருந்தனர். நகராண்மைக் கழகத் தலைவர் திரு. வி. வி. ராமசாமி அவர்களின் வரவேற்புரைக்குப் பின்னர், பள்ளிச் சிறுவர் சிறுமியரால் திருக்குறளையொட்டி, கும்மி, நடனம், நாடகம், பாட்டு முதலிய களிப்பூட்டும் காட்சிகள் நிகழ்ந்தேறியது.

பின்னர் தலைவர் திரு. ம. பொ. சி. கூறியதாவது :—

"இன்று இந்தியாவின் சுதந்திரத் திருநாள். நான் தேசியத் தமிழன், (திருக்குறளைக் கையிலேந்தி) இந்த நன்னாளில் நான் மேற்கொள்ளும் சபதம் இது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் இத்தனை நாளும் போல இனியும் இந்திய மக்களுடன் இணைந்து நின்று செயலாற்றுவேன். ஏகாதிபத்தியம் வெளியேறிய பின்னர் சுதந்திர இந்தியாவில் சுதந்திர தமிழ் அரசைக் காணவே நான் விரும்புகிறேன். இதை எனது பிறப்புரிமையாகவும் கருதுகின்றேன்.

ஒரு வங்காளியோ அல்லது குஜராத்தியோ, ஆங்கிலேயனுக்குத்தான் அடிமை. அதுவும் அரசியலில் தான். ஆனால் என் தமிழினத்தவரோ, அரசியல், மொழி, கலை, பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஆங்கிலேயருக்கு மட்டும் அல்லாமல் பிற இந்திய இனங்கள் எல்லாவற்றிற்கும் கூட அடிமைப்பட்டு வாழ்கின்றனர். சரித்திர ரீதியாக ஆராயுமிடத்து தமிழர் அரசியலில் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு இரண்டு நூற்றாண்டுகள் ஆயிற்றென்றால், மொழி, நாகரிகம் ஆகியவற்றில் பிற இனத்தவருக்கு அடிமைப்பட்டு பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. எனவே, தமிழன் என்ற முறையில் தமிழ் நாட்டை, வெள்ளை,

*கறுப்பு ஆகிய எல்லா இனத்தவரிடமிருந்தும் விடுதலை செய்து பரிபூரண சுதந்திரமுள்ள சோஷலிசக் குடியரசை அமைத்தே தீருவதென்ற சபதத்தை மேற்கொள்கிறேன். உரிமைபெற்ற தமிழகம், பிற இந்திய இனங்களுடன் சம அந்தஸ்துடன் இணைந்து நின்று ஐக்கிய இந்தியாவைக் காண உதவிபுரியுமென்று இந்திய மக்களுக்கு உறுதி கூறுகின்றேன். உரிமை பெற்ற தமிழகத்தின் அரசியல், வள்ளுவர் வகுத்த பொருட்பால் வழியிலேயே அமைய வேண்டுமென்று நான் ஆவல்கொள்கிறேன். இதற்காக எவ்விதத் தியாகமும் செய்ய பின் வாங்கமாட்டேன் என்று திருக்குறளின் மீது ஆணையிட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்."*

நகராண்மைக் கழக ஆணையாளர் திரு. முத்துராமலிங்கம் நன்றி தெரிவித்த பின்னர் விழா இனிது முடிந்தது.

27-ந் தேதி திங்கட்கிழமை பிற்பகல், நகரில் உள்ள பல்வேறு கல்வி நிலையங்களுக்கும், முனிசிபல் ஆணையாளர் சுகாதார அதிகாரி, ஆர். டி. பி. சுப்ரமணிய நாடார் ஆகியவர்களுடன் ம. பொ. சி. விஜயம் செய்து, மாணவ மாணவிகளுக்கு சொற்பொழிவாற்றினர்.

27-ந் தேதி திங்கட்கிழமை இரவு எட்டு மணிக்கு விருதை சமரச சன்மார்க்க சங்க ஆதரவில், 'வள்ளலாரும் தமிழும்' என்பது பற்றி திரு. ம. பொ. சி. ஒரு மணி நேரம் பேசினர்.

## தஞ்சை கிருஷ்ணன் நாடக சபா :

ஜனவரி 29-ந் தேதி இரவு தஞ்சை தியேட்டரில் திரு. சி. என். அண்ணாத்துரை எழுதிய 'ஓர் இரவு' நாடகத்திற்கு திரு. ம. பொ. சி. தலைமை தாங்கி, அதன் சிறப்பைப் பாராட்டிப் பேசினர்.

## திருவையாறு அரசர் கல்லூரி:—

ஜனவரி 30-ந் தேதி, மாலை 4 மணிக்கு திருவையாறு அரசர் கல்லூரியில், 'மொழியும் வழியும்' என்பது பற்றி ம. பொ. சி. பேசுகையில், தமிழின் பண்டைச் சிறப்பையும், இன்றைய சீரழிவையும் விளக்கிக் கூறி, வருங்காலத்திலேனும் தமிழுக்கு வாழ்வு தேடப் பாடுபடுமாறு மாணவரை வேண்டினர்.

**கலைமகள் வாசகசாலை :**

இதன் ஆதரவில் 31-ந் தேதி, அயன்புரத்தில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான தொழிலாளர்கள் வந்திருந்தனர். திரு. டி. செங்கல்வராயன் தலைமை தாங்கினர். செயலாளர் திரு. கொ. மோ. ஜனார்த்தனம் தமிழரசுக் கழக நோக்கங்களை விளக்கிக் கூறினர். திரு. ம. பொ. சிவஞானம், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், வ. உ. சியின் தியாகமும் அவர் வழி வந்த தேசியத் தமிழர்களின் உழைப்பும் தமிழர் நலத்திற்குப் பயன்பட வேண்டுமென்றும், இந்திய விடுதலைப் போரில் கடமையைச் செய்த அவ்வீரர்களின் பெயரால் தமிழகத்தில் தனியரசு கோர தமிழருக்கு உரிமை உண்டென்றும் கூறினர்.

**சேலம் :**

பிப்ரவரி 2-ந் தேதி காலை சேலம் அம்மாம்பேட்டை, திருவள்ளுவர் நூல் நிலையத்தின் ஆண்டு விழா தமிழறிஞர். தேவநேயப் பாவாணர் தலைமையில் நடந்தது. திரு. ம. பொ. சிவஞானம் விழாவைத் துவக்கி வைத்துப் பேசுகையில், மார்க்ஸிஸம், காந்திஸம் போன்று வள்ளுவரிஸமும் உன்னதம் வாய்ந்த சமூக அமைப்பைக் கற்பனை செய்கிறதென்றும், வள்ளுவரின் பொருட்பால் வழி தமிழகத்தில் தமிழரசு அமைந்தால் தான், அறத்துப்பாலில் கூறும் அறநெறியைத் தமிழர் வாழ்க்கையில் கடைப்பிடிக்க இயலுமென்றும் கூறினர். திரு. முத்துசாமி "வள்ளுவர் உலக கவி" என்னும் பொருள் பற்றி பேசினர்.

மாலை அதே இடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. ம. பொ. சிவஞானம் பேசுகையில், வள்ளுவர் காட்டும் அரசியலுக்கும், இனி வரவிருக்கும் தமிழ்க் குடியரசுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்கிக்கூறினர். வழக்கறிஞர் திரு. அரங்காச்சாரியார் "வள்ளுவர் புரட்சிக் கவி" என்பது பற்றி பேசினர். பிற்பகல் மூன்று மணிக்கு, ராஜாஜி சேவா சங்கத்தில் நடைபெற்ற காங்கிரஸ்

ஊழியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு, தமிழரசு இயக்கம் சம்பந்த மாக, ஊழியர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளித்தார். இறுதியில், தமிழரசு இயக்கம் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு ஆக்கம் தேடும் வகையிலேயே நடத்தப்படுமென்று வாக்குறுதி அளித்தார். வந்திருந்த எல்லா காங்கிரஸ் ஊழியர்களும் தமிழரசு இயக்கத்திற்கு ஆதரவளிப்பதாக வாக்குறுதியளித்தனர்.

மறுநாள் மூன்றாம் தேதி மாலை 4-மணிக்கு சேலம் கல்லூரியில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் தமிழர் தனியரசு வேண்டுவதற் கான பல்வேறு காரணங்களையும் விளக்கிக் கூறியதுடன், அதற்கான வழியில் பாடுபட வேண்டியது மாணவர்களின் கடமை யென்றும் வற்புறுத்திக் கூறினர்.

மாலை ஆறு மணிக்கு குகை திருவள்ளுவர் கழகத்தில், 'முத்தமிழ்' என்னும் பொருள் பற்றி ஒரு மணி நேரம் பேசினர்.

## சென்னை :

இம்மாதம் 9-ந் தேதி வள்ளுவர் விழா, சென்னைப் புரசையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. காலையில் யானை மீது திருக் குறள் சுவடி வைக்கப்பட்டு, பட்டுக்குடை கவிய, திரு. இராதாகிருட் டினப் பிள்ளை தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக, ஆயிரக்கணக்காகக் கலந்துகொண்ட னர். முச்சந்திகள் தோறும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. மாலை 4 மணிக்கு, முத்தையச் செட்டியார் பள்ளியில், மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. சோமசுந்தர பாரதியார் தலைமை தாங்கினர். அமைச்சர் அவினாசிலிங்கம், ரா. பி. சேதுப் பிள்ளை, ம. பொ. சிவஞானம், கே. எ. பி. விசுவநாதம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தமிழ் நாட்டுப் பிரிவினை, தமிழகத்தில் தமிழரசு, ஆகிய பல தீர்மானங்கள் நிறைவேறின.

# 'நமக்கென்ன'!

அன்பு கணபதி

நாட்டை, "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?" என்ற எண்ணமும் பேச்சும் நாட்டில் ஒரு காலத்திலே உலாவத் தொடங்கின. ஒரு காலத்தில் என்ன? இன்றும் கூடக் காண்கின்றோமே! இந்த எண்ணமும் பேச்சும் சரிதானா, இவை நாட்டுக்கும் மக்களுக்கும் அவசியமா என்று ஆராய்வதற்குப் பழைய நிலையும் புதிய நிலையையும் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தல் நல்லது.

இராமன் ஆட்சி நல்லதா, இராவணன் ஆட்சி நல்லதா என்பதைப்பற்றியோ, பசுவும் புலியும் யார் ஆட்சியில் ஒரே துறையில் ஒன்றாகச் சேர்ந்து தண்ணீர் குடித்தன, யார் ஆட்சியில் தண்ணீர் பசுவையும் புலியையும் ஒன்றாகச் சேர்த்துக் குடித்துவிட்டது என்பதைப் பற்றியோ எல்லாம் இங்கு நான் ஆராயவில்லை.

நாட்டை யார் ஆண்டால் என்ன? அதாவது, "'ஆனா' ஆண்டால் என்ன, 'ஆவன்னா' ஆண்டால் என்ன" என்ற பொறுப்பற்ற உணர்ச்சி கொண்டு ஆட்சி நல்லதா, கெட்டதா என்றெல்லாம் எண்ணிப்பார்க்காது, "அதெல்லாம்" பெரிய இடத்து விவகாரம்; நாம் உண்டு, நம் வேலைஉண்டு; அதைப் பற்றி எல்லாம் நமக்கென்ன!" என்ற அலட்சிய மனப்பான்மையில் பொறுப்பற்ற போக்கில் மக்கள் வாழ்ந்தார்கள்—வாழ்ந்து வருகிறார்கள் என்பதைக் காட்டவே மேற்கூறிய பழமொழி உண்டாயிற்று; அந்த அலட்சிய மனப்பான்மையைக் காட்டவே, நானும் அப்பழமொழியை இங்கு எடுத்துக் காட்டினேன்.

"பெரிய இடத்து விவகாரத்தைப்பற்றி மட்டும்தானா இவர்கள் இந்த அலட்சிய எண்ணத்தில் இருந்தார்கள் என்றால், அதுதான் இல்லை. வாழ்க்கையின் எந்தத் துறையில் எடுத்தாலும் இதே அலட்சிய மனப்பான்மை; பொறுப்பற்ற உள்ளம்; கடமை உணர்ச்சி அற்ற பேச்சு, செயல் எல்லாம். தமிழர்களுடைய வாழ்க்கையில் பிறக்கின்ற குழந்தையிலிருந்து சாகின்ற கிழவன் வரையில் பாருங்கள். ஏதாவது பற்றுதலான—பொருப்பான எண்ணமோ பேச்சோ செயலோ இருக்கின்றனவா? இருக்க வேண்டாமா? ஏன் இல்லை?

எப்போது செய்த புண்ணியமோ, ஏதோ இந்த உலகத்தில் பிறந்தோம்—சிலகாலம் வாழ்ந்தோம்—பிறகு மடிகின்றோம் என்ற எண்ணம் எக்காரணத்தாலோ நாட்டு மக்களிடத்தில் வேரூன்றி விட்டது. இது சரிதானா? இந்தநிலை மாற வேண்டாமா?

இந்த அலட்சிய சுபாவம் தமிழ் மக்களிடத்தில் எப்போதும் இருந்ததா? கடமை உணர்ச்சியோ, பற்றுள்ளமோ தமிழ் மக்களிடத்தில் என்றைக்கும் இல்லவே இல்லையா? இதற்குப் பழைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்க வேண்டும். பழமை என்ற உடனேயே, எல்லாம் பழங் கதைதானே என்று அலட்சியமாக எண்ணிவிடக் கூடாது. உரம் பெற்ற பழமை அஸ்திவாரத்தில் புதிய மாளிகையை எழுப்ப வேண்டும்; இறந்த காலப் பெருமையை எண்ணித்தான் வருங்கால வாழ்க்கையை வகுத்து வளம்படுத்த வேண்டும். பழமை இன்றிப் புதுமை இருக்க முடியாது; இருக்கவும் கூடாது.

பழங்காலத் தமிழ்மக்களின் வாழ்க்கை, எவ்வளவு பொறுப்பு உணர்ச்சி நிரம்பியதாக—அலட்சிய மனோபாவம்

அற்றதாக விளங்கியது என்பதைச் சிறிது எண்ணிப் பார்ப்போம்.

தமிழில் எட்டுத்தொகைநூல்களில் ஒன்று புறநானூறு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலே வாழ்ந்த பல அறிஞர்கள் அக்காலத்தில் வாழ்ந்த அரசர்கள், புலவர்கள், வீரர்கள் முதலியவர்களின் வாழ்க்கையில் அவ்வப்போது கண்ட சில அரிய நிகழ்ச்சிகளைப் பாடல்களாகக் குறித்து வைத்தனர். அத்தகைய பாடல்களில் 400 பாடல்கள் கொண்ட ஒரு தொகுதியே புறநானூறு என்பது. புறநானூற்றைப் பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாறு என்றே கூறலாம். பழந்தமிழ் மக்களின் சரித்திரத்தை அமைக்கப் புறநானூறு பேருதவி செய்கின்றது. இந்தப் புறநானூற்றில் ஓர் பாட்டு, கடமை உணர்ச்சி என்றால் என்ன என்பதை நமக்கு நன்கு தெரிவிக்கின்றது.

பொறுப்பு அல்லது கடமை என்றால் என்ன என்று நம்மைப் போலவே, அன்று ஒருவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. யார் யாருக்கு என்ன என்ன கடமைகள் இருக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணிப்பார்த்தார். சிந்தனை பலவாறாகச் சென்றதால், அவருக்கு ஒரு முடிவும் தோன்றவில்லை. கால்போன வழியில் சிந்தித்துக்கொண்டே சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒரு வயதான அன்னையைக் கண்டார். அன்னையோ நரைத்தளர்ந்து மூத்த நரை மூதாட்டியாக விளங்கினார். நல்ல அனுபவம் பெற்றவராகவும் காணப்பட்டார். நம் அன்பர் அந்த அன்னையிடம் சென்றார். "கடமை என்றால் என்ன? யார் யாருக்கு என்னென்ன கடமைகள் வேண்டும்?" என்ற வினாவை—தம் சந்தேகத்தை அந்த அன்னையை நோக்கிக் கேட்டார். அம்மூதாட்டியார்

கொஞ்சமும் யோசித்தாரில்லை. உடனே சட்டென்று பதில் கூறத் தொடங்கி விட்டார்:

" அன்பரே, கேட்பீராக ! குழந்தையை நல்ல வகையில் பெற்று வளர்த்து காத்து உலகுக்கு அளித்தல் என்னுடைய சிறந்த கடமை---அதாவது தலையாய கடமை; அவனுக்கு உயர்ந்த கல்வியும் பிறவும் தந்து சிறந்தவனாக—சான்றவனாக ஆக்குதல் தந்தையின் கடமை ஆகும்; கல்வி கேள்விகளாலும் வீரத்தாலும் சிறந்த மகனுக்கு வேலாயுதத்தை உறுதியுடையதாகச் செய்து கொடுத்து வீரனாக விளங்கச் செய்வது கருவிகள் செய்யும் கொள்ளனாகிய தொழிலாளியின் கடமை ஆகும் ; வாழ்க்கைப் பாதையில் ஒழுங்கு தவறிச் செல்லாது நல்ல நெறியில் உத்தமனாக அவனைப் போகச் செய்வது நாட்டை ஆளும் அரசனது கடமையாகும்; இவ்வளவெல்லாம் மற்றவர்கள் செய்த பிறகு அந்த மகனுக்கு என்று ஒரு கடமையும் இல்லையா என்றால், உண்டு. தன்னைச் சிறந்த மகனாகவும், சான்றவனாகவும், வீரனாகவும், நல்லொழுக்கம் உடையவனாகவும் செய்து உலகில் உயரச் செயத அன்னையும் அப்பனும் கூடிய குடும்பத்திற்கும் தொழிலாளரும் பிறரும் நிறைந்துள்ள தன் சொந்த நாட்டுக்கும் நன்மை தேடுகின்ற முறையில—நாட்டிற்கு வருகின்ற தீங்கைப் போக்குகின்ற வகையில் எதிரிகளை வென்று வாகை சூடுவதன்மூலம் தன் தாய் நாட்டைக் காக்க வேண்டும்—காத்து வளர்த்து உயர்த்த வேண்டும். இதுவே அந்த மகனுக்கு—காளைக்கு உரிய கடமை ஆகும்."

இவையே அந்த அன்பருக்கு அன்னை கூறிய மொழிகளாகும். பொன்முடியார் என்பது அந்த அன்னையின் பெயர். அன்னையின் மொழிகளை அப்படியே பார்ப்போம்:

"ஈன்று புறம்தருதல் என்தலைக் கடனே ;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

—புறம் : 312

இத்தகைய கடமை உணர்ச்சிமிக்க அன்னைகள்—இலட்சியச் செல்விகள் வாழ்ந்த நாட்டில், நான் ஆரம்பத்தில் குறித்த அலட்சிய மனப்பான்மைகொண்ட பழமொழி எவ்வாறு உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று? சிந்தித்துப் பாருங்கள்! பார்த்து உரம் மிக்க பழமை அடிப்படையில் திறம் நிறைந்த மாளிகை எழுப்புங்கள்!

எதை எடுத்தாலும் 'நமக்கென்ன' என்ற சொல்லை—தோல்வி மனப்பான்மையை விட்டு ஒழியுங்கள். 'நமக்கென்ன' என்ற நச்சுக் கொள்கை அன்று நாட்டில் உரம் பெற்றிருந்தால், நாம் ஒரு புத்தனையோ அசோகனையோ கண்டிருக்க முடியாது; கரிகால் வளவனையோ கண்ணகியையோ காதாலும் கேட்டிருக்கமுடியாது; வள்ளுவன் குறளை இன்று நம் வாய் பேசாது.

# தமிழன் பாங்கு

"புத்தமணி"

●

உயிரொன்றித் தமிழிசையை உள்ளன்பால்
போற்றுபவன் தமிழன்; என்றும்
செயிர்தீரும் தமிழ்ப்பண்ணைச் சிந்தித்துத்
தீட்டுவதும், தமிழின செம்மைப்
பயிர் ஊர்ந்து பாழ் செய்யும் பகைப் பூச்சி
ஓட்டுவதும் தமிழன் பாங்காம்;
அயர்வின்றித் தமிழ்மாண்பை அரண்செய்து
காத்திடுவான் ஆற்ற லாலே!

பாங்குயரும் தமிழிசையைப் பழிப்போனும்
பண்புற்ற தமிழ்ச்சொல் லெல்லாம்
வாங்கியதே வடசொல்லின் கடனென்ற
வன்மொழியால் வஞ்சிப் போனும்
இங்குயரும் சொல்நெறியைப் பிறமொழியில்
எடுத்தாண்டது என்று தானும்,
தாங்கவொணாப் பழிதாங்கித் தமிழனெனும்
பெயருக்கே தகவிலானே!

அறிவுற்ற தமிழனெனில் கோயிலிலே
வடமொழியை அகற்று தற்கும்,
செறிவுற்ற தமிழ்மறைகள் செழித்தற்கும்
தெருக்களிலும் பூங்கா தோறும்
வெறிகொண்டு வேற்றுவரின் பெயர்வைப்பை
விலக்கற்கும் முனைதல் வேண்டும்;
நெறிபற்றித் தமிழ்நாடு தனியாட்சி
ஏற்கின்ற நிலைகாண் போமே!

# நம் குற்றம்

மு. வரதராசன்

டில்லிமா நகரில் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபை என்பது நாற்பது கோடி மக்களின் எதிர்கால வாழ்வை அமைப்பதற்காகக் கூடியுள்ள மன்றமாகும்.

நாற்பது கோடி மக்களும் சாதி மதம் இனம் முதலிய பல பிரிவுகளாகப் பிரிந்துள்ளவர்கள். ஆனாலும், இந்தியர் என்ற ஒரு வகையில் ஒன்றுபடக் கூடியவர்கள். இந்த அரசியல் மன்றத்தில் உள்ளவர்களும், இந்த மக்களின் சார்பாக வந்துள்ளவர்கள். ஆகையால், சாதி மதம் இனம் முதலிய பல்வேறு பிரிவுகளாக உள்ளவர்களே. பொதுவாக நோக்கும்போது இந்த மன்றத்தினர் இந்தியாவின் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்தக் கூடியுள்ள இந்தியர் ஆவர்.

எல்லா நாடுகளிலும் இப்படிப்பட்ட பிரிவுகள் உண்டு; இந்த நாட்டிலும் உள்ளன. இதில் ஒன்றும் வியப்பு இல்லை. ஆயினும், வருந்தத்தக்க குறை நம்மிடம் உள்ளது. பிறப்பின் காரணமாக எழுந்த வேறுபாடுகளைப் பல நூற்றாண்டுகளாக வளர்த்து விட்ட குற்றத்துக்காக நாம் வருந்த வேண்டாமா? சாதி முதலான பிரிவுகள் இப்படிப்பட்டவை அல்லவா?

தென் ஆப்பிரிக்காவில் நிற வேறுபாடு தலைவிரித்தாடுவதை நாம் கேள்விப் படுகின்றோம்; கேள்விப்படும் போதெல்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதுபோலவே, நமக்குள் வாழ்ந்து வரும் காரணமற்ற வேற்றுமைகளைக் கண்டிப்பதில் தயங்கக்கூடாது. பேச்சளவிலே நிற்காமல்

செயலளவிலும் கடிந்து தொலைக்க வேண்டும். நமக்குள் நிலவும் வேறுபாடுகள் நம்மோடு நெடுங்காலமாக இருந்து விட்டன என்று காரணம் தேடி அமைதியடையக் கூடாது. பிறர் குற்றம் காண்பதற்கு முன். தம்குற்றம் கண்டு நீக்க வேண்டும் என்று திருவள்ளுவர் அறிவுறுத்தியது சிறப்பாக அரசியலாளர்க்கு வேண்டிய அறிவுரையாகும்.

> ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற் பின்
> தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

என்று எல்லோர்க்கும் பொதுவாக அறத்துப்பாலில் அறமாக அறிவுறுத்தினர். ஆனல்,

> தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
> என் குற்றம் ஆகும் இறைக்கு

என்று அரசியலில் வற்புறுத்தியுள்ளார்.

பிறப்பின் காரணமாக வளர்ந்துள்ள வேறுபாடுகள் என்று எண்ணும்போது பற்பல வந்து நிற்கின்றன. அவை அத்தனையும் தொலைக்கத்தான் வேண்டும். அப்போது தான் பிறநாட்டு நிறப்போர், இனப்போர் முதலியவற்றைக் கண்டிக்கும் உரிமை நமக்கு ஏற்படும்.

பிறப்பு வேற்றுமை பலவற்றுள்ளும் முதலில் நிற்பது ஒன்று உண்டு. அதுதான் இந்த நாட்டின் முதல் மாசு; இந்த நாட்டின் வரலாற்றின் பெருமை முழுதினையும் மறைத்து விடும் பெருங் குற்றம் அதுவே.

இந்த நாடு வகுப்பு வாதம் காரணமாகப் பிரியக் கூடாது என்று முழங்குகின்றோம். இந்த நாடு சாதிப் பிரிவுகளைப் பாராட்டிப் பதவி வேட்டையாடக் கூடாது என்று கூக்குரலிடுகின்றோம். இந்த நாடு மத வேற்றுமைகளை அரசியலில் கொண்டு வந்து சிக்கல் விளைக்கக் கூடாது என்று அலறுகின்றோம்.

'நவகாளி'கள் வேண்டாம் என்று தவம் கிடக்கின்றோம். பீகார்கள் தோன்றுதபடி பெருங்கவலை கொண்டு பாடுபடுகின்றோம். பாகிஸ்தான் முதலான 'ஸ்தான்'களைப் பற்றிப் பேசுவதும் பெரும் பாவம் என்று போராடுகின்றோம்.

ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒருவகைப் பாகிஸ்தானுக்கு இடம் கொடுத்து வந்திருக்கின்றோம். அந்தப் பாகிஸ்தான் மதம் காரணமாக எழுந்தது அல்ல; இனம் காரணமாக எழுந்தது அல்ல. அந்தப் பாகிஸ்தானில் வகுப்பு வாதமோ பதவி வேட்டையோ அடிப்படையில் இல்லை. அந்தப் பாகிஸ்தான் சாதி காரணமாக-பிறப்புக் காரணமாக அமைந்தது. அந்தப் பாகிஸ்தான் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இருந்து வருவதை இப்போதாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

பெரிய இந்திய நாட்டிலே ஒரு பாகிஸ்தானைபற்றிப் பேசுவதையும் குற்றமாக எண்ணுகின்றோம். ஆனால், இந்த நாட்டிலே சிறிய சிறிய ஊர்களில் எல்லாம், ஒவ்வொரு சிறிய கிராமந்தோறும் பாகிஸ்தான் பிறப்புக் காரணமாக நீடித்து வாழ இடங் கொடுத்து வந்திருக்கின்றோம்.

ஊர் என்றால் சேரி என்று ஒன்று கிராமந்தோறும் இருப்பதை வேறு என்ன என்று சொல்வது? அந்தச் சேரியில் உள்ள மக்கள் எந்த மாநகரிலும் மாநாடோ அல்லது அரசியல் மன்றமோ கூடித் தனியரசு வேண்டும் என்று ஊர்தோறும் 'ஸ்தான்' 'ஸ்தா'னைப் பிரியவில்லை. அவர்கள் அப்படி வாழ விரும்பியதாக வரலாற்றுப் போக்கிலும் இல்லை.

ஆனால் பிறப்பின் காரணமாகத் தொழில் அமைந்தது. அது எந்த நூற்றாண்டிலோ எப்போதோ அமைந்து விட்டது. அந்தத் தொழிலுக்கே பொழுதை யெல்லாம் செலவழித்து வாழும் நிலைமை அவர்களுக்கு நேர்ந்து விட்டது. தங்களைப் பற்றித் தாங்களே எண்ணி வாழும் பொறுப்பை அவர்கள் அந்தப் பழங்காலத்தில் இழந்து சோர்ந்து விட்டார்கள். மிகுதியாக உழைக்காத மற்ற மக்கள் மூளை கொண்டு எண்ணிப்பார்க்க நேரமும் ஓய்வும் பெற்றிருந்தார்கள். அதனால் தங்களுக்கு உயர்வும் சிறப்பும் நன்மையும் தேடிக்கொண்டு, அந்த உண்மை உழைப்பாளிகளுக்கு இழிவும் அவர்களின் தொழிலுக்குத் தாழ்வும் கற்பித்தார்கள்.

சுருங்கச் சொன்னால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நம்முடைய முன்னோர்களில் சிலர் மிகுதியாக உழைத்து ஒதுங்க நேர்ந்தது. பிறப்பு வேற்றுமை இதனை நிலைபெறச் செய்து விட்டது. இதன் பயனாக, இன்று ஊர் தோறும் இரண்டு 'ஸ்தான்'கள் காண்கின்றோம். ஒன்று 'சாதிஸ்தான்' மற்றொன்று 'சேரிஸ்தான்'.

இதை வளர்த்த குற்றம் நம் முன்னோருடையது. அவர்களை இப்போது என்ன செய்வது?

இந்த 'ஸ்தான்'களை இன்னும் வைத்துக்கொண்டிருப்பது யார் குற்றம்? நம் குற்றமே அல்லவா?

இந்தக் குற்றத்தை இன்று நீக்காவிட்டால். இது மற்றொரு குற்றமாகும். அரசியல் மன்றம் கூட்டி எதிர்கால வாழ்வை அமைக்க முனையும் நாம், பிறர் குற்றம் கண்டு கடியும் நாம், நம் குற்றத்தை முன்னே களைய வேண்டாமா? திருவள்ளுவர் வாய்மொழியை மீண்டும் நினைப்போம்.

> தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
> என்குற்றம் ஆகும் இறைக்கு.

# மறைந்த வரலாறு

வா. செ. குழந்தைசாமி

செய்தித் தாள்கள் தரும் விளம்பரங்கள் தான் இன்றைய தமிழகத்திலே ஒரு தனி மனிதனின் ஆற்றலை, அறிவை, அறிவின் ஆழத்தை அளக்கும் கோலாக இருந்து வருகின்றன.

இன்று பெரும்பாலான ஏடுகள் கவிஞன் என்றால் காளிதாசனையும், காவியம் என்றால் சாகுந்தலத்தையும், நீதி நூல் என்றால் கீதையையும், இதிகாச மென்றால் வியாச பாரதத்தையும், வள்ளல் என்றால் அசோகனையும் குறிப்பிடுவதும் எழுதுவதும், பெருமைப் படுத்துவதும் வழக்கமாகக் கொண்டுள்ளன. தமிழர் பண்பாட்டுக்கும் பெருமைக்கும் திரையிடப்படுகிறது.

பாரி, குமணன், ஓரி, பேகன் போன்ற வள்ளல்கள் வாழ்ந்த இந்த நாட்டில்தான் 'கொடைக்குக் கர்ணன்' என்ற பழமொழி. கற்பனைக்கும் அப்பாற்பட்ட கவிதையின் மின்சார சக்திக்கும் அடங்காத கற்புமாண்பினள் கண்ணகியைக் கண்ட இந்த நாட்டிலேதான் "கற்புக்குச் சாவித்திரி,நளாயினி சீதை" என்ற வாக்கியம். விவேகமற்ற நிலை என்பது மட்டுமல்ல; வேறு யாண்டும் காணமுடியாத விந்தையுங் கூட!

இராமாயணக் கதை எல்லோருக்கும் தெரியும். மகா பாரதக் கதையை அறியாதார் இல்லை. ஆனால் மணி மேகலைக் கதை எத்தனை பேருக்குத் தெரியும்? சிலப்பதிகாரம் கன்னல் தமிழிலே உள்ள ஒரே முத்தமிழ்க் காவியம். இன்றைய தமிழனுக்கு அவன் பழங்கால வரலாற்றை, பண்டைப் பெருமையை எடுத்துரைத்துத்

"தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா, தாரணி யெங்கும் இணையிலா இன் சரிதை கொண்டு சொல்லடா" என்று அவனை ஊக்குவிக்கும், உணர்ச்சியூட்டும் ஓரே நூல் அது. அதனிடத்தில்தான் பல்கலைக்கழகத்துக்குக்கூட மாற்றாந்தாய் மனப்பான்மை!

இன்று கல்லூரிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே கற்பிக்கும் வரலாற்றிலே தமிழ் நாட்டு வரலாறு இல்லையென்றே கூறிவிடலாம். பிரகதீஸ்வரர் கோயிலின் நிழல் சாயாப் பெருமை, சிதம்பரத்திலே நடராசர் கோயிலுக்குப் பொன் னோடு வேய்ந்த கொற்றவன் பக்தியின் பெருமை, இராஜேந்திர சோழன், இராஜ இராஜ சோழன் ஆட்சி - இவையும் இன்னும் சிலவும் கொண்ட பத்துப் பக்கங்களிலே பர்ராண்ட பேரினத்தின்—பைந்தமிழ் மக்களின்—பண்டை வரலாறு முடிவுறுகிறது.

காளிதாசனைப்பற்றி, அவன் இயற்றிய காவியம்பற்றி தன்வந்திரி பற்றித் தமிழர் படிக்கின்றனர்; ஆந்திரர் படிக்கின்றனர். வட நாட்டார் படிக்கின்றனர். ஆனால் வள்ளுவரின் குறளை, இளங்கோவின் காவியத்தை, கம்பனின் கவிதையை யார் படிக்கிறார்கள்? 'நாலாந்தா' பல்கலைக் கழகம் பற்றி வரலாறு உண்டு. கடைச் சங்கத்தைப் பற்றிப் பேச்சே இல்லை.

உள்ளபடியே ஆராய்வோமானால் இன்று தமிழனுக்கு வரலாறு இல்லை. அவன் பெருமைக்கு வரலாறு இல்லை. தமிழன் தன்னையுணர, தன் முன்னோர் முடிசூடி யாண்ட உயர்வையுணர வழியில்லை. "நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், அது நமக்கே யுரிமையாம் என்பதறிந்தோம்" என்று வீரமூட்டும் வரலாற்று நிகழ்ச்சிகள் இல்லாமற் போகவில்லை. "இருந்தும் இல்லாத குறை"தான். தமிழன் வரலாறு இருண்டு கிடக்கிறது.

தமிழர் வரலாற்றைத் தமிழன் தலை தூக்கி நடக்கும் முறையிலே சிலப்பதிகாரம் புறநானூறு, அகநானூறு போன்ற கடைச்சங்க நூல்களிற் காணப்படும் நிகழ்ச்சிகளையும் மற்ற பல்வேறு ஆதாரங்களையும் கொண்டு எழுதச் செய்ய வேண்டும். முயன்றால் முடியாத தல்ல. மனமிருந்தால் வழிகள் பலஉள்ளன.

நான் கவிஞனாகப் பிறந்திருந்தால் இன்பத் தமிழ் மொழியே! கரும்பில் இனிய உன் சுவையை, கன்னித் தன்மையை, தனிமையை, தொன்மையை அழகாக வியந்து கவிபாடி மகிழ்வேன். இன்னுயிர்த் தமிழ் மக்களே! உங்கள் துன்பங்களை உணர்ச்சி பெருகும் பாக்களால் உலகுக்கு எடுத்துரைத்து மருந்து தேடுவேன். ஆனால் நான் கவிஞனாகப் பிறக்கவில்லையே!

அழகாகப் பேசும் ஆற்றல் படைத்திருந்தால், அருந்தமிழ் அணங்கே! உன் அருமையை, பெருமையை, அன்றைய உயர்வை, இன்றைய தாழ்வை அன்புடைத் தமிழ் மக்கள் தம் அல்லலை நாடுதோறும் சென்று முழங்குவேன். ஐயகோ எனக்கு அவ்வாற்றலுமில்லை!

நான் செல்வனாகப் பிறந்திருந்தால் செந்தமிழ் வல்லுநர்களைத் தேடிப் பிடித்துச் சிறப்புக்கள் செய்வேன். ஏற்றுவேன், போற்றுவேன். தெருவிலே படுத்து உறங்கும் என் செந்தமிழ்த் தோழனுக்கு மாளிகை இல்லாவிட்டாலும் மண் குடிசையாவது கட்டித் தந்து மகிழ்வேன். ஆனால் நானோ செல்வனல்லன்.

வாழ்வுக்கோர் புத்துணர்வாம், உடலியக்கும் நல்லுயிராம் உயிரியக்கும் நுண்கலையாம் உயர்தமிழே! உன் இன்றைய நிலையை, உன் மக்களின் நிலையை எண்ணி எண்ணி மனம் புழுங்கு வதிலேயே என் இன்பம் துன்பம் இரண்டும் உள்ளன. காலம் உயிரையும், கவலை மனத்தையும் தின்றுதீர்க்கின்றன. என் செய்வேன்!

# புரட்சிக் கவி புஷ்கின்

பம்ப்பாபதி

காலத்தின் தேவையை அனுசரித்துத்தான் மகான்கள் தோன்றுகிறார்கள். எந்தக் காலத்தில் எது குறையோ அதைச் சரிசெய்யத்தான் அவர்கள் பிறக்கிறார்கள். முதலாவது அலெக்சாண்டர், நிக்கொலஸ் மன்னன் போன்ற கொடுங்கோலரின் ஆட்சியில் மக்கள் வாடி வருந்தினார்கள். அக் கால்த்தில் கொடுங்கோ லாட்சியால் நாடு காடாகியது. இம்சையும் அதிகார ஆணவமும் மக்களின் வாழ்க்கையை நிலையற்றதாக ஆக்கின. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என அஞ்சி ஏங்கச் செய்த காலம் அது; மக்களின் மனத்துயரைப் போக்கி வாழ்க்கையை ஒழுங்குபட அமைத்துக் கொள்ள ஒரு வழிகாட்டி தோன்றவேண்டிய காலம் அது. அன்றுதான் புஷ்கின் பிறந்தான்.

இலக்கிய அரங்கத்தின் உச்ச நிலையை அடைந்தவன் புஷ்கின் என்றால் அது மிகையாகாது. ரஷ்யக் காவிய உள்ளத்தின் அரசன் எனப் பெயர் பெற்றான் புஷ்கின் எல்லாத் துறைகளிலும் கலைகளிலும் திறமை வாய்ந்த பேரறிஞன். ரஷ்யர்களின் உள்ளத்தில் உறைகின்ற தெய்விகக் கவி. மக்களின் உணர்ச்சிகளைத் தன் அழகுபெறு காவியங்களுள் வரைந்துள்ள ஓவியன்.

ரஷ்ய விவசாயிகள் ஏழ்மையில் அழுந்தி ஆணவ ஆட்சியின் கீழ் அல்லலுற்றுக் கருத்தழிந்து—நசித்துக் கிடந்தனர். அவர்களைத் தட்டி எழுப்பி, உலகோடு சமமாக நின்று தலைதூக்கி நிலைபெற்று வளமாக வாழச் செய்த பெருமையில் புஷ்கினுக்குப் பெரும் பங்கு உண்டு.

புஷ்கின் ரஷ்யன் என்றாலும், வள்ளுவர், சேக்ஷ்பியர் இவர்களைப்போலவே உலகம் போற்றும் கவி ஆவான். புஷ்கினின் கவிதைகளுக்கு ஒரு தனிச் சிறப்பு: அவை தொழிலாளர் கூட்டத்தை—அவர்கள் எந்த நாட்டினராளுலும் சரி—தட்டி யெழுப்பித் தங்கள் நிலைமையைப் பற்றி ஆராயத் தூண்டும்.

இன்று அமைதியை நிலவச் செய்வதுதான் உலகத்தின் முக்கிய நோக்கம். மனித சாதியின் அடிப்படையான உரிமை சுதந்திரம்தான். அதை முதலில் நிலை நாட்டினு லொழிய அமைதி என்பது வெறும் ஆகாயக் கோட்டை தான். மக்களுக்காக மக்களால் ஏற்படும் மக்களுடைய அரசாங்கம்தான் விழுமியதாகும். மக்களை உயிர் உள்ள வெறும் பிராணிகளைப்போல நடத்தாமல், மக்களை மக்களாகவே நடத்தவேண்டும். இத்தகைய அரிய நோக்கங் களைக் கொண்டவைதான் அவனுடைய கவிதைகள் எல்லாம். இவற்றைப் பற்றிப் படிப்போர் மனம், அறிவு என்றவற்றைக் கவர்ந்து உருக்கும் வகையில் தீவிரமாக எழுதியுள்ளான். இன்றைய உலகத்தில் புஷ்கினுடைய கவிதைகளுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஏனெனில் இன்றைய உலகம் பாமர னுடைய உலகம்தானே.

மக்களின் வாழ்க்கையைப் பற்றியும், அவர்களின் கோரிக்கைகளைப் பற்றியும் முதன் முதலில் எழுதிய ரஷ்யக் கவி புஷ்கின்தான். புஷ்கினுடைய மனத்திலே பாமரனும் ஏழைத் தொழிலாளருமே இடம் பெற்றிருந்தபடியால் கல்லாதவரும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய அழகிய நடையில் எழுதினன். இவன் காலத்தில் இருந்த புலவர் களும் இவனுக்கு முன்னிருந்த புலவர்களும் பணக்காரர் களைப் புகழ்ந்து பாடுவதும் வள்ளல்களை அண்டிப் பிழைப்

பதுமே தொழிலாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுதிய எழுத்துக்கள் யாவும் செல்வர்களையும் செல்வத்தையும் புகழ்ந்தன; காதல் என்ற பெயரால் மட்ட ரகமான காமத்தை விவரித்தன. இந்த நிலையில் தோன்றிய புஷ்கின், இலக்கிய உலகில் ஒரு புரட்சி செய்தான். செல்வர்களின் செல்வமும் கேளிக்கைகளும் அவன் மனத்தைக் கவரவில்லை. எழுத்திலும் இடம் பெறவில்லை. ஆனால் தொழுத கையுடன், அழுத கண்ணுடன், குடிக்கக் கஞ்சியின்றி, குந்தியிருக்கக் குடிசையின்றி, ஆண்டான் சவுக்கடிக்கு அஞ்சி வாழ்ந்த ஏழை உழைப்பாளியைப் பற்றிப் பாடினான். பிறருக்குப் புரியாத வகையில் எழுதுவதுதான் கவிதை என்ற எண்ணத்தால் எழுதும் "மேதாவி"களைச் சேர்ந்தவனல்லன் புஷ்கின். மக்களின் வாழ்க்கையே கலையின் விளைகளம் என்றும், வாழ்க்கையின் ஆய்வே கலை யென்றும் கருதி, கலைத்தொண்டாற்றியவன் புஷ்கின். தன் கலையினுடைய நற் பயனை மக்களுக்குக் கொடுத்து அவர்களுடன் வாழ்ந்தான்.

புஷ்கின் படைத்த கலை "ரஷ்ய மக்களின், ஆன்ம உருவகம்; ரஷ்ய மக்களின் உள்ளப் பிழிவு" என்று டர்கனீவ் சொல்லுகிறான். "ரஷ்ய மக்களின் வாழ்க்கையை நிழல்படமாக எடுத்தவன்; அவர்களுடைய ஆன்மாக்களின் நேர்ப் பிரதிநிதி; அவர்களுடைய மனப் பண்பின் திட்பத்தை விளக்கும் உரைகாரன். பசிய கண்ணாடியை அணிந்து வாழ்க்கைப் பசுமையை மட்டும் கண்டானில்லை. மக்களுடைய வாழ்க்கையைச் சாவதானமாகவும் முழுவதாகவும் துருவி அறிந்து விவரித்தான். சாசர், கிராப் என்ற கலைஞர்களைப் போல முற்றிலும் உண்மைக்கே ஏற்புடையதான நெறியில் காட்சிகளைக் கண்டு தன் கலைகளில் பதிவு செய்தான். அவன் தரும் வாழ்க்கை ஓவியங்க ளெல்லாம் உயிர்பெற்று இயங்கு

வனைக் காணுகின்றபொழுது பெரிய மாயாவியாகவே நமக்குத் தோன்றுகிறான். ரஷ்ய வாழ்க்கையின் பொருட் களஞ்சியமே புஷ்கினின் கவிதை". இவ்வாறு ஓர் அறிஞன் கூறியிருக்கிறான்.

கவிதைகளின் நோக்கமென்ன? அவன் கவிதைகளை எதற்காக எழுதினான்? தன் வாழ்க்கையின் குறிக்கோளை நிறைவேற்ற—மக்கள் இன்பமுடன் வாழ—ஜாரின் கொடுங் கோலாட்சியினின்று விடுபட—மனிதனை மிருகமாக்கும் ஆணவ ஆட்சியெல்லாம்—கண்மூடி ஆட்சி யெல்லாம் மண் மூடிப் போக.

ஒட்டிய வயிறுடன் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுத் தொழிலாளி பெற்ற சிறு கூலியையும் பித்தேற் றிக் கொள்ளையிடும் கொள்ளை முதலாளிகளின் ஓவியத்தைப் பாருங்கள்:

கண்ணீரால் கருத்துருகார்
    கசங்கி மிக வாடிடினும்
எண்ணூரால் உழவர் துயர்
    எசமானர் ஆயினவர்
சாட்டை பிரம்பெடுப்பார்
    சட்ட திட்டம் பேசிடுவார்.
காட்டுத் தனமிருந்த
    கட்டளைகள் தாம்தருவார்.
ஏழைத் தொழிலாளி
    ஏங்க உயிர் எடுப்பார்
ஏழை உழைப்புக்கும்
    ஏழை பெறும் கூலிக்கும்
ஏழை பெரு ஒய்வுக்கும்
    எமதரும ராஜாக்கள்.

அவன் காலத்தை வென்ற கவி. முக்காலம் உணர்ந்த ஞானி. எனவே, வருங்காலத்தை உணர்ந்து அவன் பாடிய பாட்டுக்கள் அனைத்தும் இன்று நனவா யிருக்கின்றன.

# தமிழன் - அன்றும் இன்றும்—௬

அ. ச. ஞானசம்பந்தம்

பழந்தமிழன் வாணிகம் கப்பல் மூலம் நடைபெற்றது ஒரு புறமிருக்க, அவனது உள்நாட்டு வாணிகமும் மிக்கப் பெருமை வாய்ந்தது. சங்கப்பாடல்களில் எங்கும் இதனைக் காணலாம். சகடம் என்று கூறப்படும் வண்டிகளில் பொருள்களை ஏற்றிச் செல்லும் வணிகர் பல சௌகரியங்களை முன்னிட்டுக் கூட்டமாகவே எங்குஞ் செல்வர். அத்தகைய கூட்டத்திற்குச் சாத்து என்ற பெயரும் வழங்கி வந்துளது. பொருள்களை வைத்து வாணிகஞ் செய்யுங் கடைத்தெருவிற்கு 'அங்காடி' என்ற பெயர் காணப்படுகிறது. காவிரிப்பூம்பட்டினத்துக் கடைவீதியைப்பற்றிப் பட்டினப் பாலையினும், மதுரைமாநகரின் கடைவீதிச் சிறப்பை மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் என்ற நூல்களிலும் பரக்கக் காணலாம்.

இவற்றுள் ஒன்றை விரிவாக ஆராய்வோம். மதுரைமாநகரத்து நாளங்காடியைப்பற்றி மதுரைக்காஞ்சி ஆசிரியர் கூறும் வகையால் பழந்தமிழ் நாட்டின் செல்வ நிலையையே ஒருவாறு அறிய முடிகிறது. ஒரு நாட்டில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருள்களைப் பொருத்தே, அந்நாட்டின் பொருளாதார நிலை இருக்கும். எந்த நாட்டில் ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரிக்கிறதோ அந்நாடு வறுமையில் வாட நேரிடும். உதாரணமாக நமது இந்தியாவையே எடுத்துக்கொள்வோம். நமக்குத் தேவையான பொருள்களை, குண்டூசி முதல் கப்பல்வரை, எல்லாவற்றையும் வேற்று நாட்டிலிருந்து வரவழைக்கிறோம்;

இங்கிலாந்தை எடுத்துக்கொள்வோம். உணவுப் பொருள்களை வேற்று நாடுகளிலிருந்து இங்கிலாந்து தேசம் வரவழைக்கிறது. ஆனால் அதற்குப் பதிலாக இயந்திரங்கள் முதலியவற்றை ஏற்றுமதி செய்கிறது. மேலும் எவ்விதமாகவேனும் தங்கள் பொருள்களைப் பிறர் வாங்குவதற்காகப் பல வழிகளையும் அவர்கள் கையாளுகின்றனர். அவர்கள் நாட்டில் இயந்திரங்கள் உண்டு. ஆனால் வெறும் இயந்திரங்களை ஓடவிட்டால் அவை பொருள்களை உண்டாக்குமா? மூலப் பொருள்களாகிய பஞ்சும், எண்ணெய் விதைகளும் இருந்தால் தானே துணியும், சோப்பும் உண்டாக்க முடியும். இந்நிலையில் நாம் என்ன செய்கிறோம். நமது நாட்டில் உண்டாகிற பஞ்சையும், எண்ணெய் விதைகளையும் அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறோம். அவற்றையே மீண்டும் துணியாகவும், சோப்பாகவும் பெறுகிறோம். இவ்வாறு நடைபெற்று வருமானால் நமது பொருளாதார நிலை கீழே போகாமல் வேறு எங்ஙனம் இருக்கமுடியும்.

இஃதொரு புறமிருக்கப் போர் நடைபெற்ற சென்ற சில ஆண்டுகளில் எண்ணற்ற பொருளை ஏற்றுமதி செய்தோம். பணத்தால் நிறைந்த பிரிட்டனைக்கூட நமக்குக் கடன்கார தேசமாக ஆக்கிவிட்டோம். ஆனால் இந்நிலை எங்ஙனம் முடிந்தது? நமது நாட்டிற்குத் தேவையான பொருள்களை, நாமுபயோகிக்காமல் பிறருக்கு அனுப்பி வைத்ததனாலேயே இது முடிந்தது. அப்பொழுது நாம் அனுபவித்த வறுமை சொல்லிலடங்காது. இன்று நாமடைந்த பயனென்ன? நமது கடனை அத்தேசம், திருப்பித்தர இயலுகிறதா? சாதாரண மக்கள் ஒருவர்க்கொருவர் கடன்படுவதும் கொடுப்பதும்போல் தேசங்கள் செய்யமுடியாது. சாமான்கள் மூலமாகவே கடனைத்தீர்க்க இயலும். இன்று நமக்கு

வேண்டும் பொருள்களைப் பிரிட்டன் அனுப்பத் தயாராக இல்லை. காரணம் அதே பொருள்கள் அவர்களுக்கும் தற்பொழுது தேவையாயிருப்பதே. மேலும் அப் பொருள்களைத் தரக்கூடிய அமெரிக்கா போன்ற தேசங்களிலிருந்து கூட நாம் பெற முடியவில்லை.

இவற்றிலிருந்து நாம் அறிவதென்ன? சாதாரணமான ஒரு நாட்டின் பொருளாதார நிலை கேடு அடையாமல் இருக்கவேண்டுமேயானால், அந்நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதி என்ற இவ்விரண்டும் தம்முள் ஒத்த ஒரு அளவுடையனவாக இருக்கவேண்டும். இன்றேல் தீங்கே விளையும். அமெரிக்கா போன்ற தேசம் பணச் செல்வத்தோடு, பொருட்செல்வத்தையும் பெற்றிருப்பதால் மேற்கூறிய இரண்டனுள் ஒன்று மிகினும் குறையினும் நாட்டின் செல்வ நிலை இடர்ப்படுவதில்லை. எனவே, எந்த ஒரு நாடு பொருட்செல்வம் மிக்கு விளங்குகிறதோ, எந்த நாடு தன் தேவைக்குப் பிறர் கையை எதிர்பாராமல் இருக்கிறதோ அந்த நாடே செல்வ நாடு என்று கூறலாம். மேலே கூறிய கருத்துக்களை மனத்திலிருத்திக்கொண்டு பழைய தமிழ் மதுரையைக் காண்போம்.

'மாடம் பிறங்கிய மலிபுகழ்க்கூடல்'—(ம. கா. 429)

என்று அதனை ஆசிரியர் கூறுகிறார். வானைமுட்டுங் கட்டிடங்கள் உலகின் பலவிடங்களிலும் தம் புகழைப் பரப்பி நிற்கின்றன. கடைத்தெரு மிகவும் அகன்றது. பணியாரம் விற்கும் பாட்டி முதல் மணியும் பொன்னும் விற்கும் பெருங்குடிவாணிகர் வரை அனைவரும் நிறைந்துள்ளனர். இவர்கள் விற்கும் பொருள்களைப் பெரிதும் விரும்பி வாங்குகிறவர் வேற்று நாட்டினர் என்றுந் தெரிகிறது. இங்ஙனம் வந்த வேற்று நாட்டவர் தங்கள் பொருள்களை இங்குக்கொணர்ந்து

விற்று அவற்றிற்குப் பதிலாக இப்பொருள்களை வாங்கிச் செல்கின்றனர். இற்றை நாளில் இங்ஙனம் பெருவாணிகம் நடைபெறுகிற இடங்களில் திடீரென மாறுதல்கள் ஏற்படுவது கண் கூடு. பொருள்களின் விலைகள் திடீரென ஏறியும் இறங்கியும் பலரைப் பெருஞ் செல்வராகவும்; ஓட்டாண்டியாகவும் ஆக்குதல் நாம் அறிந்த தொன்றே.

ஆனால் இவ்வளவு பெரு வியாபாரம் நடந்தும் (மார்க்கட்டின்) நிலை மாறாது இருந்ததாம் மதுரைமாநகரில். இதனை ஆசிரியர் தற்காலப் பொருளாதார சாத்திரத்திற் குறிக்கப் படுஞ் சொற்களாற் குறிக்கவில்லை. ஆனால் அதனைவிடச் சிறந்த முறையிற் குறிக்கிறார். வியாபாரப் பெருக்கிற்கு ஓர் உவமை தருகிறார். அவ்வாறு உவமிக்கப்படும் பொருள் 'கடல்' ஆகும். அக்கடலுக்குக் கொடுக்கிற அடைமொழிகளால் முதற் பொருளையுஞ் சிறக்க வைக்கிறார். அஃதெங்ஙனம் என்று காண்போம். கடலுக்குப் பல இயல்புகள் உண்டு. அவற்றில் சிறந்த ஒன்றை இவர் எடுத்தாளுகிறார். எவ்வளவு நீர் வந்து கூட உயருவதில்லை, மேலும் எவ்வளவு நீர் ஆவியாகப் போனாலும் தன்னளவில் ஓர் அங்குலமும் குறைவதில்லை, இவ்வியல்பை ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். இவ்வியல்பை மதுரையின் வியாபாரத்திற்கு வைத்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

வேற்று நாட்டிலிருந்து எவ்வளவுதான் கப்பல் கப்பலாகப் பொருள்களைக் கொண்டுவந்து குவித்தாலும், அல்லது கப்பல் கப்பலாக இங்குள்ள பொருள்களை அள்ளிச் சென்றாலும், அவற்றால் மதுரை நகர நாளங்காடி (மார்கட் நிலவரம்) மாறுபடுவதில்லையாம். அதாவது நாட்டின் பொருளாதார நிலையில் வேற்றுமை காணப்படுவதில்லை.

இஃது ஆச்சரியப்படத் தக்கது ஒன்றல்லவா? ஓர் உபமானத்தால் ஆசிரியர் இந்தப் பொருளாதாரக் கருத்தை விளக்கிக் கூறிவிட்டார். இனி, பாடலை நோக்குவோம்.

"மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு(து) இரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாளங் காடி (ம. கா. 425—30)

[கரைபொருதிரங்கு முந்நீர்—கரையில் அலைகளாக அடிக்கிற கடல். கொளக்கொள—வேற்று நாட்டவர் அள்ளிச்செல்ல. தரத்தர—அவரது பொருளைக் கொண்டுவந்து சேர்க்க]

அன்றைத் தமிழ் நாட்டின் பொருளாதார நிலை இருந்தவாறு என்ன? இன்று அஃதிருக்கும் நிலை என்ன? இக் கேள்விக்கு விடை தேவை இல்லை.

---

## நீங்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்

ஏ, தாழ்ந்த தமிழ்நாடே! தன்னை மறந்து தேய்ந்த தமிழ்நாடே! கடவுளின் இலட்சணத்தை அறியாத சோர்வுற்ற தமிழ்நாடே! வீறு கொண்டெழு என்று திராவிட அரசியல் அறிஞர் சி. என். ஏ. அவர்கள் விடுக்கும் வேண்டுகோள் ஒவ்வொரு இளைஞர் உள்ளத்திலும் ஊடுருவிப் பாயவேண்டும். இதுவே சி. என். ஏ. அவர்கள் கொண்டுள்ள இலட்சியம்.

## ஏ, தாழ்ந்த தமிழகமே!

ஆசிரியர் :

அறிஞர் சி. என். அண்ணாத்துரை, எம். ஏ.

அழகிய நூல் விலை 0—8—0

வியாபாரிகட்குத் தக்க இலாபம் தருவதுடன் எங்கள் செலவிலேயே அனுப்பப்படும். மற்றும், அறிஞர் சி. என். ஏ. அவர்களின் திராவிடர் நிலை, நாடும் ஏடும், கல்ல தீர்ப்பு, மறுமலர்ச்சி முதலிய புத்தகங்களும் கிடைக்கும்.

விபரங்கட்கு: திராவிடன் பதிப்பகம்.

P. B. 18, வேலூர், (வ. ஆ.)

# "எதையோ பேசினார்"

"எழில்"

வேதாந்த நெறிக்கும் மற்றச் சமய நெறிகளுக்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்ந்து குறிப்பெழுதிக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன். 'இன்று சமய உலகிலேயே ஒரு தெளிவை ஏற்படுத்திவிட முடியும்' என்ற நம்பிக்கையோடு தெருவில் நடந்தேன். என் பேச்சைக் கேட்க நல்ல கூட்டம் வந்திருக்கும் என்றும், அந்தக் கூட்டம் மகிழுமாறு நன்றாகப் பேசவேண்டும் என்றும் எண்ணிக்கொண்டே பஸ் நிலையத்தை அடைந்தேன்.

"உனக்கு வாழ்க்கைப்பட்டு" என்று தொடங்கி விம்மிய குரலைக் கேட்டுத் திரும்பினேன். குழிந்த கன்னங்களையும் அழுக்கேறிய ஆடையையும் கண்டேன். பளபள என்று மின்னும் கற்களோ உலோகமோ காதிலும் இல்லை; கழுத்திலும் இல்லை; கையிலும் இல்லை. அந்தப் பெண்ணுருவைப் பார்த்தும் பார்க்காததுமாய் நின்றிருந்த ஒருவர் காக்கி உடை உடுத்திருந்தார். அவருடைய கண்களிலும் வறுமை இருந்தது; பேச்சிலும் அந்த வறுமை இருந்தது.

பேச்சில் வறுமை என்றால் குறைந்த அளவான பேச்சு என்று எண்ணவேண்டாம். வறுமையால் தாழ்வுற்றுப் பிறரையும் தாழ்வுறச் செய்யும் போக்கு அந்தப் பேச்சில் இருந்தது; அநாகரிகம் அந்தப் பேச்சில் இருந்தது; முரட்டுத்தனம் அந்தப் பேச்சில் இருந்தது; ஒருவனைப் போக்கிலித்தன்மை அந்தப் பேச்சில் இருந்தது. இவை

எல்லாம் வறுமையின் விளைவுகள் அல்லவா? இவை அவருடைய பேச்சில் இருந்தன.

ஐந்து வயதுப் பையன் அந்தத் தாயின் முன்தானையைப் பற்றிக்கொண்டே நின்றான்; அவனுடைய பார்வை தாயின் முகத்துக்கும் தந்தையின் முகத்துக்கும் தாவித் தாவிப் பறந்துகொண்டிருந்தது. தாய்க்கும் தந்தைக்கும் இடையே மூன்று வயதுள்ள பெண் குழந்தை இங்கும் அங்கும் திரும்பிக்கொண்டிருந்தது.

"இங்கே யார் உன்னை வரச் சொன்னது?" "எனக்கு வருவதற்கு வழி தெரியும்" "உன் துன்பம் உனக்கு, என் தொல்லை எனக்கு" "நான் நூறு நூறாகச் சம்பாதிக்கிறேனா?" "நானே வேளைக்குக் காப்பி இல்லாமல், காப்பிக்குக் காசு இல்லாமல் அலைகிறேன்" "என்னை என்ன செய்யச் சொல்கிறாய்" "இதெல்லாம் வரக்கூடாது, வந்து வாய்திறக்கவும் கூடாது" இந்த வாக்கியங்களே நான் அவருடைய பேச்சிலிருந்து நாகரிகமாகப் பொறுக்கி யெடுக்கக் கூடிய வாக்கியங்கள்.

இவற்றைத் தொலைவிலிருந்து கேட்டபோதே என் மனம் இளகி விட்டது; கசிந்து உருகத் தொடங்கிவிட்டது.

இவர்கள் பேச்சைக் கேட்டு நின்றால், மானம் என்ற ஒன்று அவர்களின் நெஞ்சைப் பிளக்குமே என்று அஞ்சி அப்பால் நகர்ந்தேன். பஸ் ஏறி உட்கார்ந்தேன். அவர்கள் இருந்த இடத்தை எட்டிப் பார்த்தேன். இருவரும் பேசியது கேட்கவில்லை. கை நீட்டி நீட்டி அசைத்த அசைவிலிருந்து பேச்சில் வேகம் பெருகிவிட்டதோ என்று எண்ணினேன்.

பஸ் புறப்படுவதற்கான விசில் ஊதப்பட்டது. அதைக் கேட்டதும், அந்த ஆள் அங்கிருந்து மடமட என்று நடந்து வரத் தொடங்கினர். தலைமட்டும் குனிந்தபடியே நடந்து வந்தார்.

"அப்பா அப்பா" என்ற குரல் என் காதுவரை எட்டியது. பையனே பெண்ணே என்று உற்றுக் கேட்டேன். பையன் சிறிது தூரம் பின் தொடர்ந்து வந்து திரும்பி விட்டான். தாயை நெருங்கி முன்தானையைப் பிடிக்க முயன்றான்; ஆனால் என்ன காரணத்தாலோ அந்தத் தாய் அவனுடைய கன்னத்தில் இடித்தாள்; தலையைத் தட்டினள். பையன் அழுதுகொண்டே நின்றான்.

அந்த ஆளோ பஸ்ஸை நெருங்கி வந்துவிட்டார். அந்தச் சிறு பெண் குறுகுறு என்று தொடர்ந்து ஓடிவந்து கொண்டே இருந்தாள். "போ, வராதே, அம்மாகிட்டே போ, அடிப்பேன் போ" என்றார் அவர். அந்த இளம் பெண்ணோ, "அப்பா, காலணா. அப்பா, காலணா" என்று விடாமல் கேட்டுக் கெஞ்சினள். அவர் தயங்காமல் பஸ்ஸின் முன்புறக் கதவைத் திறந்தபோதுதான், நான் ஏறிய வண்டியின் டிரைவரே அவர் என்பதை அறிந்தேன்.

சிறுமி—மூன்று வயதுள்ள குழந்தை—இளங்கைகளை நீட்டிக் கேட்டுக்கொண்டே நின்றாள். பஸ் புறப்படுவதற்கு முன்னே அவளுடைய கையில் ஒரு காலணா விழுந்தது. அதைப் பெற்றுக்கொண்டதும் அவள் துள்ளித் துள்ளி அசைந்து ஓடுவதைக் கண்டேன்.

பஸ் புறப்பட்டது. அந்த இளங் குழந்தையையும் அந்தத் தாயின் கை தாக்குமோ என்று அஞ்சினேன். டிரைவராக முன்னே இருந்த அந்த ஆளையும் பார்த்தேன்.

ஆனல், என் மனம் மட்டும் கந்தல் பாவாடையோடு ஓடிய அந்தப் பெண்ணையும் மறக்கவில்லை. தாயின் கையினல் தட்டும் இடிப்பும் பெற்றும் அவள் முகத்தையே பார்த்து அழுத அந்தப் பையனையும் மறக்கவில்லை.

என் பின்புறத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர் "மூன்று நான்கு வயதுக் குழந்தைகள் எல்லாம் பஸ் நிலையத்துக்கு வந்து காலணு கேட்டுப் பிச்சை எடுக்கலாமா? ரஷ்ய நாட்டில் இப்படி நடக்குமா?' என்று பக்கத்தில் உள்ளவரிடம் சொன்னர். இதைக் கேட்டவர், "ரயிலிலும் இதே தொந்தரவு. ஐந்தாறு வயதுப் பையன்கள் எல்லாம் பாட்டுப் பாடிக் காசு கேட்கிறார்கள்'' என்றார். "சின்ன வயசிலேயே பிடி பிடிக்கக் கற்றுக் கொண்டார்கள்; அதற்குக் காசு வேண்டாமா?" என்றார் மற்றொருவர். "பிடிக்குக் காசு வேண்டுமானல், மூட்டை தூக்கிக் கூலி வாங்குவதுதானே, அதற்குப் பதில் பிச்சை எடுக்கலாமா?" என்றார் பருமனக இருந்த இன்னொருவர். "சின்னப் பையன்கள் மூட்டை தூக்க விடலாமா? அதைக் கண்ணல் பார்க்கலாமா? அப்படி ரஷ்யாவில் விடுவார்களா?'' என்றார் கல்லூரி மாணவர் ஒருவர்.

இந்தச் சொற்கள் டிரைவர் காதில் விழுந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனல் பஸ் ஒலி அதற்கு இடந்தருமா?

அந்தப் பெண் குழந்தை பிச்சை எடுப்பதாக எண்ணி விட்டார்களே என்று வருந்தினேன். யாரை நோவது? வீட்டில் கண்டு கொஞ்சி மகிழாமல், வழியில் கண்டு கெஞ்சி அழவைத்த தந்தையை நோவதா? மானத்தோடு வீட்டில் அடங்கி மடியாமல் அவனைத் தேடி வெளியே வந்து போராடிய தாயை நோகவோ மனம் வரவில்லை.

அந்தப் பையனையும் நினைத்தேன். ரயிலில் பாடுவது, பீடி பிடித்துத் திரிவது, மூட்டை தூக்குவது என்றெல்லாம் உடன் இருந்தவர்கள் சொன்னபோது, அந்தப் பையனுடைய எதிர்காலத்தைச் சோதிட முறையாகக் கூறுவது போல் தோன்றியது.

அந்தத் தாய் டிரைவருடைய மனைவிதானா, மனைவியானால் அவரைத் தேடி வரவேண்டிய காரணம் இல்லையே, ஒரு வேளை வைப்பாட்டியோ, வைப்பாட்டியானால் முதலிலிருந்த அன்பு பிறகு குறைந்த காரணம் என்னவோ என்று பலவாறு எண்ணலானேன். அவர் வேறு இடத்தில் புது வைப்புத் தேடி அன்பு மாறிவிட்டாரோ, அல்லது அவருடைய ஒழுக்கத்தில் ஏதேனும் குறை இருக்குமோ, திருமணம் செய்த தொடக்கத்திலேயே அன்பு இருந்திருக்காதோ என்றும் பலவாறு எண்ணிக் கலங்கினேன்.

தொடக்கத்தில் அன்பு இல்லாமல் திருமணம் செய்தும் படிப்படியாக அன்பு வளரவில்லையா? தொடக்கத்தில் அன்பு நிறைந்திருந்தும் பிறகு வாழ்க்கை கெடவில்லையா? செல்வர்கள் வீட்டில் அன்பு வளர்வதற்குப் பட்டும் பொன்னும் காரணமாக இருப்பதுபோல், ஏழைகள் வீட்டில் அன்பு வளர்வதற்குக் காரணம் ஒன்றும் இல்லையா? கந்தல் உடுத்து அழுக்குப் படிந்திருந்தாலும் அழகும் கவர்ச்சியும் குன்றாத அந்த இரண்டு குழந்தைகளால் அன்பு வளர முடியாதா?— இந்தக் கேள்விகளும் என் உள்ளத்தில் எழுந்தெழுந்து கலக்கின.

இந்தக் கலக்கத்திற்கு இடையே பஸ்ஸை விட்டு இறங்கி அந்தச் சங்கத்திற்குச் சென்று சேர்ந்தேன். கலக்கத்திற்கு

இடையில்தான் மேடை ஏறிப் பேசினேன். நினைத்து வந்ததுபோல் அவ்வளவு தெளிவாகப் பேசமுடியவில்லை. ஆனால், பேச்சு முடிவில் தெளிவும் இருந்தது; துணிவும் இருந்தது.

"உலகத்தில் உள்ளவை எல்லாம் என் பரிணமம் என்று உணர்பவனே வேதாந்தி. உலகத்தில் உள்ள குறைகளை அவரவர்களின் தலைமேல் சுமத்திவிட்டுத் தான் தூயவனாக எண்ணுகின்றவன் நாத்திகன். மற்றவர்களின் குறைகளை எல்லாம் தன்மேல் சுமத்தி எண்ணி, அவற்றைத் திருத்தும் பொறுப்பும் தானே மேற்கொள்கின்றவன்தான் ஆத்திகன். அன்பற்ற கணவன், அன்பற்ற மனைவி, அறிவற்ற தந்தை, அறிவற்ற தாய், திக்கற்ற பையன், திக்கற்ற பெண், பொறுப்பற்ற குடும்பம், புறக்கணித்த சமூகம் என்னும் இந்தக் கொடுமைகள் இல்லாத நல்ல நாளை எதிர்பார்த்துத் தொண்டு செய்கின்றவனே வீரன். அதற்கு ஏற்றபடி எண்ணக் கற்றுக்கொள்கின்றவனே அறிஞன். அந்த நாள் வர நெடுங்காலம் செல்லலாம். ஆனால் எண்ணுவதற்கு நெடுங்காலம் வேண்டியதில்லை. இன்றே எண்ண முடியும் அல்லவா? இப்போதே எண்ண வேண்டும் அல்லவா? ஆனால் எண்ணுவதற்கு ஒரு துணிவு—வீரம் வேண்டும். அந்தத் துணிவு உடைய வீரன்தான் வேதாந்தி. அவன் என்ன எண்ண வேண்டும்? சமூகத்தில் உள்ள பண வேட்டையே அன்பற்ற, அறிவற்ற, திக்கற்ற, பொறுப்பற்ற நிலைகளுக்கெல்லாம் காரணம் என்று எண்ணவேண்டும். அங்கங்கே காண்கின்ற குறைகளுக் கெல்லாம் அவரவர்களின் மேல் குறை இல்லை என்று எண்ண வேண்டும். குறையுடைய சமூக அரசியல் அமைப்பே காரணம் என்று எண்ண வேண்டும். பண வேட்டையற்ற சமூகத்தை அமைப்

படுத கடமை என்று எண்ண வேண்டும். முரடர்களைக் கண்டாலும் ஒழுக்கம் கெட்டவர்களைக் கண்டாலும் அன்பற்றவர்களைக் கண்டாலும் அறிவற்றவர்களைக் கண்டாலும், திக்கற்றவர்களைக் கண்டாலும் எவன் இப்படி எண்ணுகின்றானோ, அவன்தான் மெய்யுணர்வு பெற்றவன். அவன் தான் உண்மை உணர்ந்த வேதாந்தி. மற்றவர்கள் எல்லாரும் திண்ணை வேதாந்தம் பேசுகின்றவர்களே" என்று பேசி முடித்தேன்.

தலைவர் முடிவுரை சொல்லத் தொடங்கியபோது, அவருடைய உறவினர் ஒருவர் அவசரமாக அவரைத் தேடிக்கொண்டு வந்தார். தலைவருடைய தமக்கை மகள் திடீரென்று ஆபத்தான நிலை அடைந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்துவரப்பட்டதாகச் செய்தி வந்தது. தலைவர் விரைந்து கூட்டத்தை முடித்தார். கவலையோடுதான் பேசி முடித்தார். சுருக்கமாக, "சொற்பொழிவாளர் எடுத்த பொருளை விட்டு விட்டு எதை எதையோ பேசினார்" என்று ஒரு வாக்கியம் குத்தலாகச் சொல்லி முடித்தார்.

கூட்டம் முடிந்து நான் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, வழியில் ஒரு தெரு மூலையில் சிறு கூட்டம் இருந்தது. நின்று, காரணம் தெரிந்துகொள்ள விரும்பினேன். யாரோ ஒருத்தி நஞ்சு குடித்துக் குற்றுயிராய் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகச் சொன்னார்கள். அங்கிருந்து நடக்கத் தொடங்கியபோது, கூட்டத்திலிருந்த ஒருவர், "ஆமாம், அந்த டிரைவர்க்கு யாரும் தெரிவிக்கவில்லையா ?" என்று கேட்டார். "அவரைப் போலீசார் விசாரணைக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறார்களாம்" என்றார் அங்கிருந்த மற்றொருவர்.

# நந்தன் : விவசாயி

'பாமரன்'

நந்தன் கதையை அறியாத மக்கள் இல்லை. ஆனால் புராண முறைப்படி அறிந்திருக்கிறோமே ஒழிய, பொருளாதார முறைப்படி அறிந்தோமில்லை. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பொருளாதாரக் கண்கொண்டு நுணுகி ஆராய்வாருக்குத் தீண்டாமை தோன்றிய தன் காரணமும் அதன் விளைவாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நிலப் பிரபுக்களின் காலின்கீழ் வீரத் தமிழர்களான தீண்டாத மக்கள் எப்படி நசுக்கப்பட்டார்கள் என்பதும் நன்கு விளங்கும். இனி, கதையை ஆராய்வோம்.

நந்தன் ஒரு விவசாயி. அவனை அடிமை கொண்ட அந்தணர் பெரிய நிலச்சுவான்தார். அவருக்கு நாற்பது வேலி நிலம் உண்டு; அந்தக் கால முறைப்படி நந்தன் முறிச் சீட்டின் மூலம் பெற்றோரால் அடிமையாக்கப் பட்டவன். எனவே, வேதியருக்கும் நந்தனுக்கும் உள்ள தொடர்பு பார்ப்பான்—பறையன் என்பதல்ல; ஆண்டான்—அடிமை என்ற வர்க்கத் தொடர்பே ஆகும். சோழ நாட்டு ஆதனூர்ச் சேரிதான் நந்தனுக்கு இருப்பிடம். செத்த மாடுதான் சிறப்பான உணவு; காடனும் மாடனும்தான் கதிகாட்டும் கடவுளர்கள்; சேரி வாழ்வுதான் சிவலோக வாழ்வு. நந்தன் தீண்டாதவனாயினும் அறிவும் ஆண்மையும் அவனிடம் சிறந்து விளங்கின. எனவே, சமூகக் கொடுமை, சாதிச் சழக்கு, சாத்திரப் பொய்ம்மை ஆகியவைகளை நினைந்து நினைந்து அவன் மனம் நொந்தான். இந்தக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற விழைந்தான்.

"தில்லையென்றொரு பதி யுண்டு; அங்கே 'அருள்வடிவான ஆண்டவன் சதா ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறான்; அங்கே சென்று பக்தி செய்தார்க்குப் பரகதி உண்டு" என்றெல்லாம் நந்தன் கேள்விப்பட் டிருக்கிறான். எனவே, நரகம் ஒத்த சேரி வாழ்விலிருந்தாயினும் கேடான அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுத்

தில்லை வெளியிலே கலந்துவிடத் தீர்மானித்துவிட்டான். ஆனால் நினைத்ததைச் செய்யும் சுதந்திரம் நந்தனுக்கு இல்லை. அவன் ஓர் ஆண்டைக்கு அடிமை. ஆண்டையின் அனுமதியின்றித் தில்லை செல்ல முடியாது. ஆகவே, நந்தன் மிராசுதாரை அணுகி,

"ஆதிபரா பரமென்னும் திருச்சிற்றம்
பலத்தைக்கண் டானந்திக்க
வேதமொழி விளங்கிவரும் திருவாயால்
விடைகொடுத்து விடுவீர்"

என்றான். நந்தனின் இந்தப் புதிய நிலைமை எசமானருக்கு நடுக்கத்தை உண்டுபண்ணிற்று. "அடே, பறையா! சிதம்பரம் என்ற சொல் உன் வாயில் வரலாமா? ஆடு மாடு தின்னும் புலையனுக்கு ஆண்டவன் தரிசனமா? அறியாமல் சொன்னாய்; மன்னித்தேன், இனியும் சொன்னால் அடிப்பேன்; கூலியைப் பிடிப்பேன்" என்று அதட்டினார். ஆனால், நந்தன் அஞ்சவில்லை. விடாமல் வந்து வந்து ஆண்டையைத் தொந்தரவு செய்து அனுமதி வேண்டினான். மிராசுதாருக்கு நந்தனின் மனப்போக்கு விந்தையை அளித்தது. எனவே,

"அந்த ரங்கமுள்ள சொந்தப் பறையனாய்
அண்டி யிருப்பதுபோய்ச் சண்டை பிடிக்கவந்தாய்"

என்று சொந்தம் பாராட்டிப் பேசினார். அந்தணருக்கு ஆத்திரமெல்லாம் நந்தன் பண்ணையை மறந்துவிட்டானே என்பதுதான். ஆகவே, நந்தனுடைய உழைப்புத் திறமையைச் சொல்லி மெச்சிப் புகழ்ந்தார். "நந்தா! என் பண்ணையில் உன் கால் பட்டால் பசுமை கொண்டு விடுமேடா" என்று பசப்பினார்.

"கதிரொரு முழமே நீளும்;
கட்டுமுக் கலமே காணும்
துதிபெறு நந்தா உன்கை
தொட்டதே தங்க மாகும்"

என்றும் நந்தனின் உள்ளம் குளிர உரையாடினார். ஆம். பறையனின் பாதம் பண்ணையில் பட்டால் பசுமை பெறும். ஆனால், அதே கால் தில்லையில் பட்டால் தீய்ந்து விடும். பறை அடித்தவன் கை

பயிரைத் தொட்டால் தங்கமாகும்; ஆனால், பகவானைத் தொட்டால் பாவமாகும். என்ன விந்தையான வாதம்! நந்தன் மிராசுதாரரின் மாய வாதத்தில் மயங்கிவிடவில்லை. சிதம்பரம் போய்த்தான் தீர வேண்டும் என்று பிடிவாதம் செய்தான்.

அவன் பரம்பரையின் உழைப்பைத் தின்று ருசி கண்ட மிராசுதாருக்கு அவனை இனி ஏமாற்ற முடியாதென்று ஏற்பட்டுவிட்டது. அப்படியே மூர்ச்சை யாகிவிடுகிறார். மீண்டும் மூர்ச்சை தெளிந்தெழுந்து இதுவரை சமாதானம் சொல்லிப் பார்த்துப் பயன்படாமல் போகவே, ஆத்திரத்துடன் சாத்திரமும் கோத்திரமும் கூறுவாரானார்.

" புத்திசொல்லிக் கேளாத மூடா உன்றன்
புரட்டெல்லாம் நானறிவேன் போடா
பக்தியென்றும் சித்தியென்றும் பறையர்க்கேது
பார்ப்பாரத் தெய்வமது பாலிக்காது
குத்தமுண்டுன் சாதியிலே வழக்கமில்லாக்
கொள்கையது சேரியிலே கூடாதப்பா "

என்று மிரட்டினார். நந்தனும்,

" சாரு நரைதிரை தீரு மருந்தது
சாதியைப் பாராது "

என்று ஆகமம் உணர்ந்த அந்தணருக்கு அறிவு புகட்டினான். பார்த்தார் மிராசுதாரர். தம்முடைய பசப்பெல்லாம் பலிக்காது என்பதை உணர்ந்து நந்தனைப் பார்த்து "நந்தா! உன் கூலியைக் கூட்டித் தருகிறேன். நீ போய்க் காடனையும் மாடனையும் கள்ளும் கறியும் வைத்துக் கைதொழுது கும்பிடு. அதிலே உனக்கு முத்தி உண்டு" என்று இனிமையாய்க் கூறினார். ஆனால், நந்தன் விரும்பியது கூலி உயர்வல்ல; கொடுமையினின்று விடுதலை எனவே, மிராசுதாரரின் தொடர்பால் தனக்குற்ற அல்லலை யெல்லாம் அடுக்கிக் கூறுவான்:

"தாவில் சகம் முளைத்த நாள் முதலாய் உமக்கு அடிமைப்பட்டேன். உள்ளங்காலில் வெள்ளெலும்பாட ஓடி ஓடி உழைத்தேன். கண்ட பயன் என்ன? நீங்கள் கொடுத்த அற்ப உணவை உண்டு

உண்டு உறங்கியதே யல்லாமல் வேறொன்றும் கண்டிலேன், எட்டும் இரண்டும் கூட்டுவதற்குரிய எட்டறிவைக்கூடப் பெற்றிலேன்'' என்று கண்ணீர் சொரிந்து கதறி அழுதான். இனி, வஞ்சனையாலும் வசைச் சொல்லாலும் வழிப்படுத்த முடியாது என்பதை அறிந்த மிராசுதாரர் அவனைத் தடிகொண்டு தாக்கினர். அடி பொறுக்காத நந்தன் அலறி ஓடவே, கற்களை எடுத்துக் கண்டபடி வீசினர். நந்தன், "அடித்தது போதுமையே அடிமை வேலை செய்யும் என்னுடன் வாதோ'' என்றான்.

ஆத்திரம் கொண்டமட்டும் அடித்துச் சலித்த மிராசுதாரர் நந்தனைப் பார்த்து தமது இறுதிக் கோரிக்கையை எடுத்துரைத்தார். "அடே மூடா! பண்ணைக்குச் செல். நாற்பது வேலி பயிரைக் கவனி. நாற்றைப் பிடுங்கி நடவு செய். களத்தில் படுத்துக் காவல் செய். அப்புறம் சிதப்பரம் செல்ல அனுமதி தருவேன். இங்கே நில்லாதே'' என்று ஆணையிட்டு அப்பால் சென்றார்.

ஆண்டையின் மனத்தை மாற்றுவது அரிது என்று அறிந்தான் நந்தன். ஆண்டை அடித்த அடிகளோ அவன் உடலைப் புண்படுத்தின. அம்பலத் தரசைக் காண முடியவில்லையே என்ற கவலை அவன் உள்ளத்தைப் புண்படுத்தியது. எனவே, "ஐயோ! ஆண்டை அடித்த அடியால் ஆலையில் பட்ட கரும்பென என் அங்கம் நைந்து போச்சே! வேதனை உடலுடன் எப்படி வேலை செய்வேன்? நாற்பது வேலி பூமி பயிரிடுவது எப்போ? நாதனைக் காண்ப தெப்போ?'' என்று அழுதவண்ணம் ஒரு தனி இடத்தை நாடி மரத்தடியில் சாய்ந்தான். ஆம். அவன் உள்ளத்தைப் பறிகொண்ட தெய்வமும் அவனைக் காக்கவில்லை. அவன் உழைப்பைப் பறிகொண்ட ஆண்டையும் அனுமதி தரவில்லை. எனவே, இறைவனையும் எசமானையும் நிந்திக்கலானான்.

"பாவி எனக்கோ அந்தப் பார்ப்பான் மனமிரங்கான்''

* * * *

பத்து வருட காலமாகப் பார்ப்பானைக் கேட்டேன்
சித்தமிரங்கிப் போய்வா என்றொரு நல்லசேதி சொல்லக்காணேன்

என்று ஆண்டையை நிந்தித்தான்.

பின்னர்,

"தில்லையம்பல வாணத் தெய்வம் புலையர்க்காகக்
கல்லாய்ச் சமையலாச்சுதே"

* * * *

"அடிமுடி ஒன்றுமில்லா அம்பலத் தரசே உன்பால்
கொடியன் நான் வந்தாலென்ன குறையுமோ அதனால் நீதி
நடனஞ்செய் பார்ப்பான்கையில் நடுங்கவோ விடுத்தாய்"

என்று கதியற்ற தீண்டாத மக்களைக் காப்பாற்றக் கருணையற்ற தெய்வத்தைக் கனன்று பேசினன். சோர்வுற்ற நிலையில் தான் பிறந்த பறைக்குலத்தவர் படும் பாட்டையெல்லாம் நினைந்து "பாவிப் புலையனுப் இனியும் பிறப்பேனே? இப்பாரினில் இருப்பேனே? ஆற்றிலே குளத்திலே வீழ்வேன். என் ஆவியைத் தொலைத்திடு வேன்" என்று ஆண்டையையும் ஆண்டவனையும் வெறுத்ததோடு தம் ஆவியையே வெறுக்கலானன்.

இதற்கு மேல் கதை ஆண்டவனது அருள் வழியில் செல்லு கிறது. சோர்வுற்ற நந்தன் அயர்ந்து உறங்க, கடவுள் கனவில் காட்சி அளிக்கிறார். ஒரு நள்ளிரவிலே சிவ கணங்கள் நாற்பது வேலி பூமியையும் நடவு செய்துவிடுகின்றன. தம ஆசை நிறைவேறிய அதிசயத்தை அறிந்த மிராசுதாரர் ஆனந்தமடைந்து, நந்தன் தில்லை செல்ல அனுமதி தருகிறார்.

* * *

இதுவரை கூறியதிலிருந்து வேதியர் வேடத்தில் மிராசுதாரர் காட்சியளிக்கக் காண்கிறோம். சேரி என்பது மிராசுதாரரின் சிருஷ்டி. பறையர் என்று உழைப்பாளி மக்களை ஒதுக்கி வைத்தது பண்ணையிலே பாடுபடச் செய்வதற்கான சூழ்ச்சி. காடன், மாடன் ஆகியோர் மிராசுதாரர்கள் பண்ணைப் பறையருக்குக் கற்பித்துத் தந்த தெய்வங்கள்—என்பவற்றை அறிகிறோம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னே சுரண்டல் வாதிகள் செய்த இந்தச் சூழ்ச்சி இன்னமும் ஆட்சிபெறக் காண்கிறோம். விவசாய நந்தன் அன்று தன் மரபுக்கு உற்ற கொடுமையை அமைதியான முறையில் எதிர்த்துப் போராடி ஞன். நந்தன் அம்பலத்தரசை நாடியதற்கு அந்தண மிராசுதாரரின்

கொடுமையே காரணம் என்பதை அவன் வாய்மொழிகளே அறிவிக்கும். சேரியின் கொடுமை அவனுக்குச் சிதம்பரத்தை நினைவூட்டியது. ஆண்டையின் அடக்குமுறை ஆனந்த மூர்த்தியை நாடச் செய்தது. இது அன்றைய நிலை.

சாதி, சமயம், சாத்திரம், பழக்க வழக்கம் என்று பாசாங்கு செய்து நந்தனை மடக்கப் பார்க்கிறார் மிராசுதாரர். பலிக்காது போகவே நாற்பது வேலி பூமி நடவு நட்டான பிறகு சிதம்பரம் செல்ல அனுமதி தருகிறார். இங்கேதான் வேதியரின் வேடம் கலைந்து சுரண்டல் உருவமாகிய—மிராசுதாரர் காட்சியளிக்கிறார்.

இன்று நாம் காண்பதென்ன? எங்கும் ஆலயங்கள் ஹரிஜன மக்களுக்குத் திறந்துவிடப்படுகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னே ஆலயம் செல்ல உரிமைவேண்டிய அரிஜன நந்தன் அடித்து நொறுக்கப்பட்டான். இன்று அவன் பரம்பரையினருக்கு ஆலயத் தெய்வங்களெல்லாம் அன்புடன் காட்சியளிக்கின்றன. ஆனால், அன்று நந்தன் கோரியதல்ல, இன்று அவன் பரம்பரை கோருவது. "உழைப்புக்கு ஏற்ற ஊதியம். உழைப்பாளிகளுக்கே உலகம் சொந்தம்" என்ற பொருளாதாரக் கோரிக்கையின் அடிப்படையில் பாட்டாளிப் பறையர்கள் உலகமெங்கும் உள்ள உழைப்பாளி வர்க்கத்துடன் ஒன்று சேர்ந்து முதலாளி—மிராசுதாரர் வர்க்கத்தின்மீது போர் தொடுத்துவிட்டனர். இந்தப் போரின் வெற்றியில்தான் நந்தன் வெறுத்த அந்தச் சேரி வாழ்வு, அடிமையின் கொடுமை அத்தனையும் தொலைந்து அவன் பரம்பரை சீர்பெற முடியும் என்பதில் ஐயமில்லை. அன்று நந்தனை மயக்கச் சாதியும் சாத்திரமும் சாதகமாய் இருந்தன. அவன் எழுச்சியை நசுக்கக் கல்லும் தடியும் கருவிகளாய் அமைந்தன. இன்றும் அவன் பரம்பரை மக்களான விவசாயிகளின் தலையில் குண்டும் குண்டாந்தடியும் கூத்தாடுகின்றன. என்றாலும் உழைப்பாளி மக்கள்—பாட்டாளிப் பறையர்கள் மண்டை உடைந்தாலும் மனம் உடையாது போர்புரிகின்றனர். வாழ்க பாட்டாளி மக்கள்! வெல்க பொருளாதாரப் புரட்சி!! தொலைக சாதிக் கொடுமை!!!

# மதிப்புரை

## நம் தாய் (நாடகம்)

ஆசிரியர்: திரு. எஸ். டி. சுந்தரம். வெளியிட்டோர்: முல்லைப் பதிப்பகம், பிராட்வே, சென்னை. விலை ரூ. 2-4-0. நாடகத்துறையில் புகழ்பெற்று வரும் திரு. சுந்தரம் இந் நாடகத்தை நன்கு எழுதியிருக்கிறார். பல இடங்களில் வாக்கிய அமைப்புகள் கவிதையின் சாயல் பெறுகின்றன. அடிமைத்தனத்தில் உழல்வோர் உணர்ச்சி பெற்று வீறு கொள்வது எப்படி என்ற கேள்விக்கு ஒரு நாடக ஆசிரியர் என்ற முறையில் விடையளித்திருக்கிறார் ஆசிரியர்.

## கவியின் கனவு (நாடகம்)

ஆசிரியர்: திரு. எஸ். டி. சுந்தரம். வெளியிட்டோர்: முல்லைப் பதிப்பகம், பிராட்வே, சென்னை. விலை ரூ. 2-8-0. ஏற்கெனவே நாடக மேடைகளில் பெரும்புகழ் பெற்றுவிட்ட நாடகத்தின் நூல் வடிவம்தான் இப்புத்தகம். எனவே நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்தவர்கள் இந்நூலையும் படித்து மகிழவேண்டியது அவசியம்.

## வருகின்றார் நேத்தாஜி (பாடல்)

ஆசிரியர்: எஸ். டி. சுந்தரம். வெளியிட்டோர்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை 12 அணா. அண்ணல் நேத்தாஜியிடம் ஆசிரியர் சுந்தரம் கொண்டுள்ள அளவற்ற பக்தியின் பயனே இப்பாடல் நூல். சொல்லும் வகையிலும் சொல்லும் பொருள் இங்கே சிறப்புறுகிறது.

## சேரநாடு (மாதம் இருமுறைப் பத்திரிகை)

ஆசிரியர்: வித்துவான் சதானந்தம், நெம்மாரா, கொச்சித் தனியாசு. விலை 4 அணா. மலையாளிகளிடையே தமிழ்க் குரலெழுப்பி வரும் இப் பத்திரிகை நமக்கு உறுதுணையாகும் என்பதால் மகிழ்ச்சியடைகிறோம். தக்க புலமை பெற்ற ஆசிரியரின் முயற்சி வெற்றி பெறுவதாக.

## ஏ, தாழ்ந்த தமிழகமே!

ஆசிரியர்: திரு. சி. என். அண்ணாத்துரை. வெளியிட்டோர்: திராவிடன் பதிப்பகம், வேலூர், வட ஆர்க்காடு. விலை 8 அணா. கருத்துக்கும் கண்ணுக்கும் இனியது இச் சிறு நூல். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திரு. பாரதிதாசனின் படத்தைத் திறந்து வைக்கும்போது ஆற்றிய சொற்பொழிவுதான் இது. தமிழகம் உயர வேண்டுமானால் அது தன் தாழ்வை முதலில் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா? அதற்கு இந் நூல் நல்ல வழி காட்டுவதே.

## வருங்காலத் தமிழகம்

ஆசிரியர்: திரு. கா. அப்பாத்துரை. வெளியிட்டோர்: தமிழர் பதிப்பகம், லிங்க செட்டி தெரு, சென்னை-1. விலை ரூ. 1-0-0. வருங்காலத் திட்டம் வகுப்பதற்காகப் பழங்காலச் சிறப்பையும், இடைக்கால இழிவையும், தற்காலச் சீரழிவையும் இந் நூல் விளக்குகிறது. விரிவான முறையில் எழுதவேண்டிய கருத்துக்கள் இந் நூலுள் உள்ளவை என்பதை நூலின் அமைப்பால் அறிகிறோம். பல விழுமிய கருத்துக்கள் உள்ளன. கருத்து வேறுபாட்டுக்குரிய சில செய்திகள் காணப்பட்டாலும் இந் நூல் தமிழரால் வரவேற்கத் தக்கதே என்பது திண்ணம்.

## எழில் (மாதம் ஒரு புத்தகம்)

பதிப்பாசிரியர்: திரு. ர. தட்சிணாமூர்த்தி. வெளியிட்டோர்: சரசுவதி பதிப்பகம், தின்னனூர். விலை ரூ. 1-0-0. மிகச் சிறந்த புலவர்களும், புகழ் பெற்ற எழுத்தாளர்களும் இதில் எழுதியிருக்கிறார்கள். பல சுவை; பல வகை; நல் விருந்து. முயற்சி வெற்றிபெற வேண்டும்.

## 'முல்லை' (மாத வெளியீடு)

ஆசிரியர்: ரகுநாதன். முல்லைப் பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை. விலை 8 அணா. முல்லையின் புதுக் கோலம் மிக நன்று. விஷயச் சிறப்பும் தோற்ற அழகுக்கு ஏற்றதா யுள்ளது.

---

பதிப்பு: தமிழ் முரசுப் பதிப்பகம், இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
அச்சு: செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை 1. ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்.

# தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

## உள் நாடு

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 6—0—0 |
| 6 மாதச் சந்தா | ,, 3—0—0 |
| தனி இதழ் | ,, 0—4—0 |

## வெளி நாடு

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 7—0—0 |
| 6 மாதச் சந்தா | ,, 4—0—0 |
| தனி இதழ் | ,, 0—5—0 |

விவரங்களுக்கு எழுதுக:

**தமிழ் முரசுப் பதிப்பகம்**

திருவல்லிக்கேணி : : சென்னை

## டென்டோமாக்

பல் சொத்தை விழாமல்
பாதுகாக்கிறது.

பயோரியா, ஏயிற்றி லிருந்து ரத்தம் சுரத்தல், பல்வலி முதலியவற்றினின்றும் உங்கள் பற்களைப் பாதுகாக்க டென்டோமாக்கை உபயோகியுங்கள்.

## ஸ்காபினில்

சொறி, சிரங்கு, கரப்பான் போன்ற தோல் சம்பந்தமான வியாதிகளுக்குத் தலை சிறந்த மருந்து.

விரைவில் குணப்படுத்த வல்லது என்று பிரபல டாக்டர்கள் கூறுகிறார்கள்

# ஸ்வாதி ப்ராடக்ட்ஸ் லிமிடெட்

த.'பெ. 655, சென்னை-14